விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 26 திங்கட்கிழமை (10.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 203

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


# யாழ்.மேலதிக நீதிபதி சிறிநிதிக்கு இராணுவத்தால் கொலை அச்சுறுத்தல்

## அவரின் காரின் மீது பகிரங்கமாகச் சுட முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரனின் வாகனம் மீது பட்டப்பகலில் பகிரங்கமாக துப்பாக்கிப்பிரயோகம் செய்வதற்கு இராணுவம் முயற்சித்துள்ளது.

எனினும் பொதுமக்களின் தலையீட்டினால் அம் முயற்சி முறியடிக்கப் பட்டது. இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்.பரமேஸ்வராச் சந்திக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)



நயினை நாகபூசணி அம்மனின் தேர்வீதி உலாக் காட்சி.

## கொலை அச்சுறுத்தல் விடுத்த மூன்று சிப்பாய்களும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரனின் வாகனம் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்ட மூன்று இராணுவச்சிப்பாய்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இம் மூவரும் கந்தர்மடம் சந்தியில் உள்ள இராணுவக் காவலரணில் கடமையாற்றுபவர்கள் என (10 ஆம் பக்கம் பார்க்க)

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம் ஜேர்மனி–2006



பிரான்ஸை வென்று கிண்ணத்தை சுவீகரித்தது இத்தாலி

உள்ளே

## அனுசரணையாளராக செயற்பட இங்கிலாந்திற்கு அரசு அழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான அனுசரணையாளராக செயற்படுமாறு இங்கிலாந்திற்கு மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆலோசிப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தூதுவராக சச்சின் வாஸ் குணவர்த்தன லண்டன் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இவருக்கான பயண ஏற்பாட்டை இங்கிலாந்துக்கான இலங்கைத்தூதரகம் செய்துள்ளது. இங்கிலாந்து சென்று அங்குள்ள அதிகாரிகளை சந்தித்த சச்சின் வாஸ் குணவர்த்தன விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் மீண்டும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக கூறியுள்ளார்.

இலங்கையின் முன்னைய நிர்வாக நாடாக இங்கிலாந்து இருந்தமையை சுட்டிக் காட்டிய அவர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இங்கிலாந்து அனுசரணையாளராக பணியாற்றவேண்டுமென்றும் அரசாங்கத்தின் சார்பில் அவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

சச்சின் வாஸ் குணவர்த்தனவின் இந்தப் பயணமும் வெளிவிவகார அமைச்சுக்கு தெரியாமலே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## நீதிபதிக்கு அச்சுறுத்தல் கூட்டமைப்பு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதியின் வாகனம் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட வன்முறை முயற்சி தொடர்பாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய இராணுவத்தினரைக்கொண்டுள்ள அரசு எவ்வாறு நாட்டில் நீதியை நிலைநாட்ட முயற்சிக்கும் என அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள். அவர்களுக்கே இராணுவத்தால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் பாரா ளுமன்றத்தில் இது தொடர்பில் போராட்டம் நடத்த வேண்டி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச–5)

## பதில் இராணுவத்தளபதியாக நந்த மல்லவராட்சி தெரிவு

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் நந்த மல்லவராட்சி இராணுவத்தின் பதில் தளபதியாக பதவியேற்றுள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் இராணுவ தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுதாரியின் தாக்குதல் காரணமாக காயமடைந்த இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா தற்சமயம் சிங்கப்பூரில் சிகிச்சைபெற்று வருகிறார்.

அவர் பூரண சுகமடைந்து நாடு திரும்பும் வரை மேஜர் ஜெனரல் நந்த மல்லவராட்சி பதில் இராணுவத்தளபதியாக பணியாற்றுவார் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பதில் இராணுவத்தளபதி நந்தமல்லவராட்சி 32 வருடகாலமாக சேவையாற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச–9)

## நாட்டின் சமாதான முயற்சிகளுக்காக மகிந்தவுடன் கூட்டுச்சேர ஐ.தே.க. மறுப்பு

## இந்தியாவுக்கு தகவல் அனுப்பிவைப்பு

இலங்கை அமைதி முயற்சிகள் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் எவ்வித உடன்பாடும் செய்துகொள்ள முடியாது என்று இந்திய அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் நிருமராவிடமும் இந்திய அரசாங்கத்திடமும் உடனடியாக இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வகாண மகிந்தவும் ரணிலும் இணைந்து செயற்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து சமாதானம் தொடர்பாக விவாதிக்க ரணிலுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். இருவருக்குமிடையில் அலரி மாளிகையில் கடந்த வியாழக்கிழமை இச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்புக்கு 30 நிமிடத்திற்கு முன்னதாக ஐக்கியதேசியக்கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசாந்த புஞ்சி நிலமேவை பிரதியமைச்சராக்க மகிந்த ராஜபக்ஷ பதவியேற்கவைத்தார்.

மகிந்தவின் இந்த செயற்பாட்டால் ஐக்கிய தேசியக்கட்சி கடும் அதிருப்தி அடைந்துள்ளது. தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் தொடர்ந்து இணைத்துக்கொண்டிருந்தால் அமைதி முயற்சிகளுக்கான ஆதரவை அளிக்கமாட்டோம் என்று ஏற்கனவே ஐக்கியதேசியக்கட்சி தெரிவித்திருந்தது.

இந் நிலையில் மீண்டும் தமது கட்சி உறுப்பினரை (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




# நான்காவது முறை இத்தாலி சம்பியன் ஆனது

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்த பிரான்ஸ்-இத்தாலி அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் பெனால்டி ஷூட் அவுட் மூலம் 5-3 என்ற கோல் கணக்கில் இத்தாலி வெற்றி பெற்றது.

நேற்று பேர்லினில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மூன்று முறை சாம்பியன் பெற்ற இத்தாலி, ஒரு முறை சாம்பியன் பெற்ற பிரான்ஸ் ஆகிய அணிகள் மோதின.



மேற்படி ஆரம்ப விசில் ஊதியதிலிருந்து ஆட்டம் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. ஆட்டத்தின் 5-வது நிமிடத்தில் பிரான்ஸின் தியரி ஹென்றி மின்னல் வேகத்தில் பந்தைக் கொண்டு சென்ற போது இத்தாலி வீரர் ஸம்ரோட்டா தடுத்து வீழ்த்தினார் என்ற குற்றத்திற்காக நடுவர் குரோசியோ எலிசொன்டோவினால் மஞ்சள் அட்டை பெற்றார்.

ஆட்டத்தின் 6-வதுநிமிடத்தில் பிரான்ஸ் வீரர் மலூட கிபிர் வேகத்தில் பந்தைக் கொண்டு சென்ற போது பெனால்டி ஏரியாவில் வைத்து இத்தாலி வீரர் மற்றஸியினால் தடுத்து வீழ்த்திய குற்றத்திற்காக நடுவர் குரோசியோ எலிசொன்டோ பிரான்ஸிக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கினார்.

7-வது நிமிடத்தில் பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் பெனால்டி சொட் அடிக்க பந்து கோல் போஸ்டில் பட்டு வலைக்குள் செல்ல பிரான்ஸ் 1-0என்ற கோல் கணக்கில் முன்னிலைபெற்றது.



இதற்குப் பதிலடி கொடுக்க இத்தாலி அணியினர் பெரும் முயற்சி செய்தனர். 9-வது நிமிடத்தில் கிடைத்த கோனர் வாய்ப்பை நழுவ விட்டனர்.


11-வது நிமிடத்தில் இத்தாலி அணித் தலைவர் பபியோவை தடுத்த குற்றத்திற்காக சாக்னோலிற்கு நடுவரினால் மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது.

ஆட்டத்தின் 19-வதுநிமிடத்தில் இத்தாலிக்கு கோனர் வாய்ப்புக் கிடைத்தது. கோனரிலிருந்து பிர்லோ அடித்தசொட் மேலாக எழுந்து வர கோல் போஸ்டுக்கு அருகிலிருந்த மற்றஸி தலையால் பந்தை வலைக்குள் தள்ள கோல்



ஆகியது.


இதனால் இத்தாலி ஆட்டத்தை 1-1 என சமநிலை செய்தது. தொடர்ந்து முதற்பாதி வரை இரு அணிவீரர்களும் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட முதற்பாதி 1-1 என்ற



கோல் கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது.

தொடர்ந்து 62-வது நிமிடத்தில் பிர்லோவிடம் பாசைப்பெற்று லூகாடோனி அழகான முறையில் அடித்தசொட் கோலாக மாற இத்தாலி ரசிகர்கள் துள்ளிக் குதித்தனர். எனினும் நடுவரினால் ஓவ்-சைட் கோல் என அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது பாதி முடிவுறும் நேரத்தில் இரு அணியினருக்கும் கிடைத்த சந்தர்ப்பங்கள் எல்லாம் நழுவிச் செல்ல இரண்டாவது பாதி நிறைவில் இரு அணியினரும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையிலிருந்தன.



எனவே வெற்றியைத் தீர்மானிப்பதற்காக மேலும் 30 நிமிடங்கள் வழங்கப்பட்டது. இதில் 104-வது நிமிடத்தில் பிரான்ஸின் சக்னோவிடமிருந்து பெற்ற பாஸை இத்தாலி அணித் தலைவர் மேலாக அடித்த பந்தை கோல் போஸ்டுக்கு அருகில் வைத்து இத்தாலி கோல் கீப்பர் பபுன் அழகாகத் தடுக்க பிரான்ஸின் கோல் வாய்ப்பு நழுவியது.

109-வது நிமிடத்தில் பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் ஆத்திரமடைந்து மூர்க்கத்தனமான முறையில் தலையால் இத்தாலி வீரர் மார்க்கோ மற்றஸியை நெஞ்சுப் பகுதியில் இடித்து விழுத்தினார்.

இதனை அவதானித்த குரோசியோ எலிசொன்டோ ஜிடேனுக்கு உடனடியாக சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றினார்.

தொடர்ந்து மிகுதி 10 நிமிடங்களை பிரான்ஸ் அணியினர் 10 வீரர்களுடனேயே விளையாடினர். மேலதிக நேரம் 30 நிமிடங்கள் வழங்கப்பட்டும் இரு அணியினரும் கோல் போடாத நிலையில் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையிலேயே இருந்தது.

**அமிர்தன்**

எனவே வெற்றியைத் தீர்மானிக்க இறுதியில் பெனால்டி ஷூட் அவுட் வழங்கப்பட்டது. இதில் இத்தாலி அணியினர் 5 ஷூட்டையும் கோலாக்க பிரான்ஸ் வீரர் ரிசெக்யூற் அடித்த சொட் கோல் போஸ்டில்பட்டு நழுவ இறுதி



யில் இத்தாலி அணி பெனால்டி ஷூட் அவுட் மூலம் 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 4-வது(1934,1938,1982) முறையாக உலகக் கிண்ண த்தைத் தனதாக்கியது.

# மூன்றாவது இடம் பெற்றது ஜேர்மனி

18-வது உலகக்கோப்பைத் தொடரில் ஜேர்மனி மூன்றாவது இடத்தைப்பெற்று ஆறுதல் தேடியது.




பாஸ்டியன் ஸ்கிவின்ஸ்பீகர் அசத்தலாக ஆட ஜேர்மனி அணிபோர்த்துக்கலை 3:1 என்ற கோல் கணக்கில் சுலபமாக வீழ்த்தியது.

'சேம்சைட்' கோல் ஒன்றை அடித்து ரசிகர்களுக்கு வெறுப்பேற்றி போர்த்துக்கல் நான்காவது இடத் தைப்பெற்று நாடு திரும்புகிறது.

நேற்று முன்தினம் ஸ்டுட்கார்ட்டில் நடைபெற்ற தொடரின் மூன்றாவது இடத்திற்கான அணியை தெரிவு செய்வதற்கான போட்டியில் அரையிறுதியில் தோல்வியுற்ற ஜேர்மனி, போர்த்துக்கல் அணிகள் மோதின.

சொந்த மண்ணில் கோப்பை வெல்லும் கனவு தகர்ந்த நிலையில் ஜேர்மனி மூன்றாவது இடத்தைப்பெற்று உள்ளூர் ரசிகர்களை ஆறுதல் படுத்த களமிறங்கியது.

அதன் அணித்தலைவர் மைக்கல் பாலக் ஆடாதா நிலையில் கடந்த 2002ஆம் ஆண்டு உலகக் கிண் ணத் தொடரில் அணித் தலைவரும் அனுபவ கோல் கீப்பருமான ஒலிவர் கானிடம் தலைமை ப்பதவி வழங்கப்பட்டு அவருக்கு இத் தொடரில் இப் போட்டிக்கு சந்தர்ப் பம் வழங்கப்பட்டது.




இத்தொடருடன் ஓய்வு பெறும் போர்த்துக் கல் அணித்தலைவர் பிபோ ஆரம்பத்தில் களமிறங்கவில்லை. இப்போட்டி ஆரம்ப விசில் ஊதியதிலிருந்து ஆட்டம் விறுவிறுப்பாக இடம் பெற்றது.

எனினும் இரு அணியினரும் முதல் பாதியில் வாய்ப்புக்களை நழுவவிட முதல் பாதி கோல் எதுவும் போடாமல் சமநிலையில் இருந்தது.

எனினும் இரண்டாவது பாதியில் ஜேர்மனி கோல் மழை பொழிந்தது. ஆட்டத்தின் 56 வது நிமிடத்தில் பாஸ்பியன் ஸ்கிபின்கர் போர்த்துக்கல்லின் தற்காப்பை கடந்து கோல்கீப்பருக்கு மேலாக அடித்த சொட் கோலாக மாற ஜேர்மனி 1:0 என்ற நிலையில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து 61-வது நிமிடத்தில் ஜேர்மனியின் பிறி-கிக் வாய்ப்பில் பாஸ்ரியன் உதைக்க அதை தடுக்க முற்பட்ட போர்த்துக்கல்லின் அர்மாண்டோ பெட்டி அப்படியே கோல் போஸ்சுக்குள் தள்ள 'சேம்சைட்' கோலாக மாற ஜேர்மனி 2:0 என முன்னிலைபெற்றது.

தொடர்ந்து 78-வது நிமிடத்தில் காஸ்பியன் மீண்டும் போர்த்துக்கல் வீரர்களை சமாளிப்பதற்காக 25 மீற்றர் தூரத்தில் இருந்து



அடித்த சொட் கோலாக மாற ஜேர்மனி 3:0 என முன்னிலை பெற்றது.

ஆட்டத்தின் 77-வது நிமிடத்தில் நுழைந்த பிபோ 88-வது நிமிடத்தில் கொடுத்த பாசை தலையால் போஸ்டுக்குள் தள்ளி கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார் கோமஸ். இறுதியில் ஜேர்மனி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்று ஆறுதல் அடைந்தது.

# எமது தலைவர் தமிழினத்தை நவீன இராணுவமாக பரிணமிக்க செய்தவர்

## என்கிறார் கேணல் விதுசா

(கிளிநொச்சி)

ஆயுதங்களையே அறியாது அஞ்சியிருந்த தமிழினத்தை இன்று முழுமையான நவீன இராணுவமாக பரிணமிக்கச் செய்தவர் தமிழீழ தேசியத் தலைவர் என்று மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுசா தெரிவித்துள்ளார்.

லெப்.கேணல் நிஸ்மியா பெண்கள் படைக் கட்டுமாணப் பயிற்சி 2ஆம் அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வில் சிறப்புரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிரி நெருக்கடிகளை மிகக்கடுமையாக மேற்கொண்ட காலங்களில் எல்லாம் தமிழீழத் தேசியத் தலைவரின் திட்டமிடலில் மேற்கொள்ளப்பட்ட நகர்வுகள் மூலம் வெற்றிகொள்ளப்பட்டு விடுதலைப் போராட்டம் முன்நகர்த்தப்பட்டுள்ளது.

வரலாற்றில் முக்கிய மாற்றங்களை தேசியத் தலைவரின் திட்டமிடலும் நம்பிக்கையும் ஏற்படுத்தின. தேசியத் தலைவர் 1999இல் எல்லைப்படை என்ற மக்கள் படையினை ஏற்படுத்தி அதன் தொடர்ச்சியாக பெரும் இராணுவ வெற்றிகளை பெற்றுக்கொடுத்தார்.

மக்கள் ஆயுதம் ஏந்த வழிவகுத்துக்கொடுத்து அந்தத்துணையுடன் பெரும்வெற்றிகள்ஈட்டப்பட்டுவீழ்த்த முடியாத தளம் என்று எதிரி நம்பி வந்த ஆனையிறவுப் பெரும் தளம் வெற்றிகொள்ளப்பட்டது. இறுதிக் கட்டப்போருக்காக இன்று தமிழினம் தயாராக இருக்கிறது. தேசியத்தலைவரின் திட்டங்களில் விடுதலையை வென்றெடுக்கும் இறுதிப் போருக்கான காலம் நெருங்கிவிட்டது.

எதிரிகளின் நாசகார திட்டங்கள் முறியடிக்கப்படுகின்றன. நமது பகுதிகளில் ஊடுருவித்தாக்கும் உத்தியை எதிரி கையாள்கின்றான். இதனை முறியடிக்கும் வகையில் மக்கள் அணிதிரண்டு போர்ப் பயிற்சிகளை பெற்று வருகின்றனர். தேசியத் தலைவரின் காலத்தில் விடுதலையை நாம் நிச்சயமாக வென்றெடுப்போம். அதற்காக மக்கள் போர்ப்பயிற்சி பெற்று தயாராகிக் கொண்டிருக் கிறார்கள். அதன் ஒரு கட்டமாக சமூக வாழ்வில் இருக்கும் பெண்களும் ஈடுபட்டு இந்தப்பயிற்சிகளை பெற்று வருகின்றனர். இது விடுதலையை வீச்சாக்கும் என்றார் கேணல் விதுசா.

லெப் கேணல் நிஸ்மியா பெண்கள் படைக் கட்டுமாணப் பயிற்சி 2 ஆம் அணிப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு பயிற்சியாளர் புலிகளின்குரல் நிகழ்ச்சி அமைப்பாளர் கொற்றவை தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடரை புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஏற்றினார்.

தேசியக்கொடியை கேணல் விதுசா ஏற்றினார். லெப்டினன்ட் கேணல் நிஸ்மியாவின் திருவுருவப்படத்துக்கு மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஈகைச்சுடர் ஏற்றினார். திருவுருவப் படத்துக்கு மலர்மாலையை மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா அணிவித்தார்.

தொடர்ந்து பயிற்சியாளர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிறப்புரையை கேணல் விதுசா நிகழ்த்தினார் பயிற்சியில் நடத்தப் பட்ட போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசில்களை கேணல் விதுசா, நா.தமிழன்பன். கிளிநொச்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் வழங்கினார். (கு)

## நேர்முகப் பரீட்சை

இலங்கை வங்கி வட மாகாணத்துக்கு பயிலுநர் ஆளணி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்து போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பட்டியல் இலங்கை வங்கி வட மாகாண காரியாலயத்தில் உள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் எதிர் வரும் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெற இருப்பதால் இது சம்பந்தமான அறிவித்தல்களை இலங்கை வங்கி வட பிராந்திய காரியாலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம் என இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் அறிவித்துள்ளார். (கு)

## இராசி பலன்

**10.07.2006**
**(ஆனி 25, திங்கட்கிழமை)**
**சதுர்த்தசி முற்பகல் 10.49 மணிவரை**
**மூலம் பிற்பகல் 1.50 மணிவரை**
**இராகுகாலம் 7.28-8.58 மணிவரை**
**சுபநேரம் 11.58-1.28 மணிவரை**
**பூரண விரதம்**
**நோன்மதி தினம்**

| | |
|---|---|
| மேடம் | கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை, எடுத்த காரியம் தாமதமாகும், பிரயாணம். |
| இடபம் | மரியாதைக்குறைவு, காரியதடங்கல், பணக்குறைவு, உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம், தேகநலன், குடும்பநலம். |
| கடகம் | சுவாஸ்ரஸ்யம், போசனசுகம், முயற்சி பலிதம், ரோகநிவர்த்தி. |
| சிங்கம் | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, காரிய தாமதம், ரோகநிலை. |
| கன்னி | தாய்வழி உறவு, மனக்கிலேசம், கல்வியில் ஆர்வம், சுபசெலவு. |
| துலாம் | கூட்டு முயற்சி, இனிய சம்பவம், பிரயாண நன்மை, சகோதரர் உதவி. |
| விருச்சிகம் | காரிய தாமதம், குடும்பக்கவலை, அதிக செலவு, வீண் வார்த்தை. |
| தனுசு | கற்பனை மிகுதி, போசனசுகம், நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர், மனஸ்தாபம், அமைதிக்குறைவு. |
| கும்பம் | எடுத்த கருமங்கள் கைகூடும், தனவருவாய், போசனசுகம், கீர்த்தி. |
| மீனம் | கடின முயற்சி, ஆரோக்கியம், போசன சுகம், உறவினர் உதவி. |

- வளவன்

## இலவச மருத்துவமுகாம்

(குனங்கிளப்பு)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடாத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இந்த மருத்துவ பரிசோதனையில் கண், பல், நீரிழிவு, இரத்த அழுத்தம், சர்ம வியாதி பரிசோதனைகள் என்பன இடம்பெறவுள்ளது.

இதில் மகப்பேற்று நிபுணர் டாக்டர் பவானியால் கர்ப்பிணிகள் பரிசோதனை, கர்ப்பப்பை புற்றுநோய் பரிசோதனை நடாத்தப்படவுள்ளது. அவசியமானவர்களுக்கு இலவசமான கண்ணாடியும், மருந்துகளும் வழங்கப்படும். எனவே இதில் கலந்து கொள்ளும் பொது மக்கள் நேரகாலத்துடன் வந்து பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-37)

## கடல் அட்டைகளை எடுத்துச் செல்ல முயன்ற நால்வருக்கு அபராதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து அனுமதியின்றி 760 கடல் அட்டைகள் கொழும்பிற்கு கொண்டு செல்ல முயன்ற 4பேருக்கு சிலாபம் மேலதிக நீதவான் தலா 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

இந்த சந்தேக நபர்கள் நால்வரும் சிலாபம் தெதுறு ஓயா வீதி சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த 4 பேருக்குமே தலா 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளை மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சிடம் கையளிக்குமாறு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார். (கு-9)

## காணி வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி இல்லாத பொது மக்களுக்கு காணிகளை வழங்கும் துரித நடவடிக்கையில் கிளிநொச்சி மாவட்ட புலிகளின் நிர்வாக சேவையினர் ஈடுபட்டுள்ளனர்.

காணி இல்லாதவர்கள் தற்காலிகமாக வதியும் பிரிவு கிராம சேவையாளர், கிராம அபிவிருத்தி அங்கத் தலைவர் ஆகியோரின் விதப்புரையுடன் நிர்வாக சேவைக்கு தமது காணி கோரும் விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

இவ்வாறு விண்ணப்பித்தோர் பலருக்கு பரந்தனில் காணி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு-9)

## மீண்டும்யுத்தம் தொடங்கினால் பொருளாதாரம் முற்றாக சீரழியும்

இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் சியாம் சரண் மூலம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை அரசாங்கத்திற்கு அண்மையில் தெரிவித்திருந்த தகவல்கள் இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் வெளியாகியுள்ளன.

அவையாவன, விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் மீண்டும் ஒரு போர் ஆரம்பிக்கும் பட்சத்தில் இலங்கையின் 23 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருளாதாரம் முற்றாக சீரழியும் நிலையே ஏற்படும்.

இந்திய முதலீட்டாளர்கள் பெருமளவில் இலங்கையில் முதலீடு செய்திருப்பதனால், இன்னொரு யுத்தத்தினை இந்தியா விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. மீண்டும் ஒரு போரினை தடுக்க, நோர்வே, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடன் இணைந்து செயலாற்றவே இந்தியா விரும்புவதாகவும் தெரியவருகிறது. (கு)

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கும் காரைநகர் பிரதேசசபை

(காரைநகர்)

காரைநகர் பிரதேச சபை யானது அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஏப்ரல் மாதம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இப் பிரதேச சபைக்கு தளபாட வசதிகளோ, கணனிவசதிகளோ எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

அதனால் ஐம்பது வருடங்களிற்கு முற்பட்ட கால அலுவலகம் பேன்று இயங்கி வருவதாகவும், இப்பிரதேச சபையின் ஒரு பகுதி கட்டம் இடிந்து விழும் அபாயநிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு இயங்கும் நூல்நிலையமும் வசதிகளற்று காணப்படுவதனால் வாசகர்கள் பலரும் பல்வேறான அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. (கு-246)

## பேத்தாழையில் பூசகர் உட்பட மூவர் ஆயுதக்குழுவால் கடத்தப்பட்டனர்

வாழைச்சேனை பேத்தாழைப் பகுதியில் ஆயுதக் குழுஒன்றினால் மூன்று பேர் கடத்தப்பட்டுள்ளனர். பேத்தாழை மாரியம்மன் ஆலய பூசகர் கண்ணன் (வயது 18) நடராசா சதிஸ்குமார் (வயது 21) மற்றும் நடராசா (வயது 45) ஆகிய மூவருமே கடத்தப்பட்டுள்ளனர்.

பேத்தழை மாரியம்மன் ஆலய உற்சவத்தில் வைத்து பூசகர் கண்ணன் மற்றும் நடராசா சதிஸ்குமார் ஆகிய இருவரும் கடத்தப்பட்டனர். அதேநேரம் சதிஸ்குமாரின் வீட்டுக்கு சென்று அவரது தந்தையான நடராசாவையும் கடத்திச் சென்றுள்ளனர்.

அதேவேளை மற்றொரு வீட்டுக்குச்சென்று கிரி (வயது 13) என்ற சிறுவனை கடத்திசென்ற அந்தக் குழுவினர் பின்னர் விடுவித்துள்ளனர். இவர் கடத்தப்பட்ட போது குறிப்பிட்ட சிறுவனின் தாயார் தனது மகனை பிடித்துசெல்ல வேண்டாம் என பேசியதைத் தொடர்ந்து கடுமையாக இப்பெண் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயுததாரிகளினால் நடராசா என்பவரின் வீடும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை ஓரிரு நபர்களின் பெயரையும் விசாரித்துள்ளார்கள். நாசிவன் தீவு கிராமத்திற்கு இரவு வேளையில் சென்ற அக் குழுவினர் அதிகாலை வரைக்கும் நிற்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (கு)

## 2ஆம் கட்டக் கொடுப்பனவு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவில் சுனாமி கடல் அனர்த்தத்தால் சேதமடைந்த வீடுகளுக்கான நன்கொடை பெறத் தகுதியுடையோருக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 60 ஆயிரம் ரூபா மக்கள் வங்கி பருத்தித்துறை கிளையினால் தற்போது வழக்கப்பட்டுவருகிறது. (கு-104)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரி நிறுவனம் புதிய கல்வியாண்டு 2006 ,2007 பொறியியல் உயர் டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதன் பொருட்டு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 23 வயதிற்கு உட்பட்டவராகவும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் சித்திபெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

பழைய பாடத்திட்டத்தில் இரசாயனம், பௌதீக பிரயோக கணிதம், தூய கணிதம் ஆகிய பாடங்களுக்கு தோற்றி 'இசற்' கோர் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் உயர் தொழில்நுட்பநிறுவனத்திற்குஅனுப்பி வைக்கப்படவேண்டும். (கு-9)

## தேசிய அடையாள அட்டைகளை துரிதகதியில் வழங்க நடவடிக்கை

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு துரிதகதியில் அவற்றை விநியோகிக்க ஆட்பதிவு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் தங்களது பாதுகாப்பை முன்னிட்டு தேசிய அடையாள அட்டையை தன்வசம் வைத்திருக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இதன்காரணமாக துரிதகதியில் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான திட்டத்தை ஆட்பதிவு திணைக்களம் அமுல்படுத்தவுள்ளது. இதுதொடர்பாக பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த புதிய திட்டத்திற்கு அரசியல் கட்சிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளது. (கு-9)

# பிரான்ஸில் தொடரும் கவனயீர்ப்பு போராட்டம்



தமிழர் தாயகத்தில் நடைபெறும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை கண்டித்து பிரான்ஸில் நடத்தப்பட்டு வரும் கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் 20ஆவது நாளாக காலை 10.30 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றலின் பின் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

20 ஆவது நாளான நேற்று முன்தினம் தமிழர் விளையாட்டுக்கழகம் மற்றும் பாரிஸ் தமிழ்ச்சங்கத்தினர் கலந்து சிறப்பித்தனர். இந்நாளில் சிறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. இக்கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் பல வெளிநாட்டு மக்களையும், பிரெஞ்சு மக்களையும் கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐரோப்பியத் தலைமைக்கும் தாயகத்தில் எமது மக்களின் இன்றைய சூழ்நிலை பற்றியதுமான அஞ்சல் அட்டைகள் தமிழ் இளையோர் அமைப்பினரால் மக்களின் கையெழுத்து பெறப்பட்டு அனுப்பப்பட்டு வருகின்றது.

இதில் அஞ்சல் அட்டைகளை பிரெஞ்சு மக்களும் வெளிநாட்டவர்களும் பணம் கொடுத்துப் பெற்று நிரப்பிக் கொடுத்திருந்தனர். (க)

## அம்பாறையில் அமைதிப் பிரார்த்தனை

இலங்கையில் அமைதி நிலவ சர்வோதயா அமைப்பின் சார்பில் அம்பாறையில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

அம்பாறை- ஜப்பான் அமைதி அரங்கில் நேற்று முன்தினம் இந்தப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கை சர்வோதயா அமைப்பின் தலைவர் ஏ.டி.அரியரட்ணம் தலைமை வகித்தார். தனது தலைமையுரையில், போரின் மூலமாக இல்லாமல் அகிம்சையின் மூலமே அமைதியை உருவாக்க முடியும். முன்னைய அரசுகள் கிராம நிலைகளில் அனைத்து இன மக்களிடையே நல்லிணக்கத்தை உறுதி செய்து வந்தன. மக்களுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றார்.

இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தில் மூவின மக்களும் கலந்துகொண்டனர். (க)

## கருணா குழு உறுப்பினர் கைது

திருகோணமலை ஈச்சிலம்பற்று பகுதியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவ முயன்ற கருணாகுழு உறுப்பினர் ஒருவர் கிளைமோர் மற்றும் ஆயுதங்களுடன் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் கிளைமோர் குண்டு ஒன்றுடனும் இன்னும்சில ஆயுதங்களுடனும் ஊடுருவ முயன்ற இவர் கதிரவெளி புதூரைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் என்று தெரியவருகின்றது. (க)

## கடற்படையினரின் கெடுபிடிகளால் மீனவர்கள் தொழிலில் ஈடுபட தயக்கம்

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினரின் கெடுபிடிகள் என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பதால் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதனால் மீன்பிடித் தொழிலும் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

கடலில் அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் மோதல் சம்பவங்களையடுத்து பரவலாக தமது ரோந்து நடவடிக்கையை ஆரம்பித்துள்ள கடற்படையினர் மீனவர்கள் மீதும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மீனவர்கள் கடலில் நீண்டதூரம் சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருப்பதுடன் புலிகளின் பகுதியிலுள்ள கடற்பரப்பிற்குள் சென்று மீன்பிடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து செல்லும் மீனவர்களும் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பிற்குள் மீன்பிடிப்பதற்கு கடற்படை தடை விதித்துள்ளது.

இதனையடுத்து மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை அச்சம் காரணமாக மட்டுப்படுத்தியுள்ளனர். இதனால் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (க-9)

## அரச நிறுவனங்களில் வெற்றிடங்கள்; மக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை!

ஒருங்கிணைக்கப்பட்ட சேவையின் கீழ் ஒரு வருடத்தினுள் நடத்தப்படும் பணித் தேர்வு பரீட்சைகள் குறித்தும் பணியில் இணைத்துக்கொள்வது பற்றியும் மக்களுக்கு அறிவிக்க பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வருடந்தோறும் இந்த விடயங்கள் தொடர்பாக கால அட்டவணை வெளியிடவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் தகுதியுள்ளவர்கள் தம்மை தயார்படுத்தவும், தெளிவுபடுத்தவும் சந்தர்ப்பம் கிடைக்குமென அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்கள் குறித்து ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் மக்களுக்கு தெளிவாக அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## விபத்து

(கொழும்பு)

கொழும்பு கொட்டா றோட் காசல்வீதி புகையிரதக் கடவைப் பிரதேசத்தில் இயந்திரங்கள் மூலம் வீதிக்கு தார் இட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொறளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தாரிடும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை வீதியால் சென்று கொண்டிருந்த வாகனமொன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தின் காரணமாக 6 தொழிலாளர்கள் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொறளை பொலிஸார் வாகனத்தின் சாரதியை கைதுசெய்துள்ளதுடன் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-9)

## ஊடகவியலாளர்கள் கொலைக்கு யுனெஸ்கோ அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

ஈராக்கிலும் இலங்கையிலும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவது குறித்து யுனெஸ்கோ என்னும் ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானம் மற்றும் கலாசார அமைப்பு கண்டனத்தையும், கவலையையும் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் சுதந்திர ஊடக நடைமுறைகள் மற்றும் ஜனநாயக பணிகளுக்கு பெரும் குந்தகம் ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் இயக்குனர் நாயகம் கொச்சுரோ மன்சுவா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சம்பத் லக்மான் சில்வா மற்றும் ஈராக்கிய ஊடகவியலாளர் கஸன் ஆகியோரின் படுகொலைகளை மேற்கோள் காட்டி இந்த அறிக்கையை அவர் வெளியிட்டுள்ளார்.

யுனெஸ்கோவின் இயக்குனர் நாயகம் சர்வதேச ரீதியாக பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படும்போதும் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் நடைபெறும் போதும் தமது அமைப்பின் கண்டனத்தினை வெளியிட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## கும்பாபிஷேகம்

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு சின்னக்கோவில் தெரு கட்டைப்பிராய் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான கும்பாபிஷேகம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நேரத்தில் இடம் பெறவுள்ளது. (க-36)

## புதிய கட்டடம்

(இணுவில்)

சமுர்த்தி வங்கிக்கென காங்கேசன் துறை வீதியில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்ட வேலைகள் முடிவடைந்து வர்ணம் பூசும் வேலை விரைவில் இடம்பெறவுள்ளது. (க-122)

## வீட்டில் வைத்து சாராயம் விற்றவருக்கு அபராதம்

(துன்னாலை)

அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் சாராயம் விற்ற நாவலடி உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராக மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் அண்மையில் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இதற்கமைய கடந்த புதன்கிழமை குறித்த நபர் நீதிமன்றில் ஆஜராகி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி க.அரியநாயகம் 15ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

மேற்படி அபராதத்தை செலுத்தத் தவறின் 6 மாத காலம் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து குறித்த குற்றவாளி அபராதத்தை செலுத்திக்கொண்டதையடுத்து விடுதலையானார். (க-101)

## உள்ளூராட்சி அமைப்புக்களில் ம.உ.குழுக்களை அமைக்குக!

### சட்டத்தரணி சிவபாலன் கோரிக்கை

உள்ளூராட்சி அமைப்புகளில் மனித உரிமை குழுக்களை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் ஆசிய நிறுவன உதவியுடன் கிழக்கு புனர்வாழ்வுக்கழகம் சார்பில் ஒருநாள் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.திருமலை நகரசபை தலைவர், உறுப்பினர்கள், திருகோணமலை நகரம் மற்றும்சார் பிரதேச சபை, குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றின் அதிகாரிகள் இந்த கருத்தரங்கில் பங்கேற்றனர்.

நிகழ்வின் தொடக்கத்தில் பேசிய கிழக்கு புனர்வாழ்வுக்கழகத்தின் தலைவரும் மனித உரிமைகள் சட்டத்தரணியுமான கே.சிவபாலன், உள்ளூராட்சி அமைப்புகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோர் துணைக்குழுக்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தற்போது மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வரும் நிலையில் ஒவ்வொரு உள்ளூராட்சி அமைப்பும் மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்கான குழுக்களை அமைக்க வேண்டும். மனித உரிமை அமைப்புகள் விசாரணை நடத்த இத்தகைய குழுக்களின் அறிக்கைகள் உதவியாக இருக்கும் என்றார். (க)

## மாதாவின் தேர்ப்பவனி

(ஊர்காவற்றுறை)

குருநகர் புனித- உத்தரிய மாதாவின் சொரூப தேர்ப்பவனி எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலை வேளையில் அசம்பாவிதங்கள் நாட்டில் நடைபெறுவதால் காலையில் திருவிழா திருப்பலி முடிவுற்றதும் இத்தேர்ப்பவனி நடைபெற்று திருவிழா நிறைவுபெறும். (க-72)

## வாழைகள் சேதம்

(இணுவில்)

கடந்த சில நாட்களாக தொடர்ந்து வீசும் கடுங் காற்றினால் இணுவி, உடுவில், சுன்னாகம் மற்றும் ஏழாலை போன்ற இடங்களில் வாழை மரங்கள் பல முறிந்துள்ளன.

இதனால் வாழைச் செய்கையிலீடுபடும் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். அத்துடன் அவர்கள் பெரும் நஷ்டத்தினையும் எதிர்நோக்கி வருகின்றனர். (க-122)

## இன்று ஒரு தகவல்

### நம்பிக்கை

காசி க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் காசி விஸ்வநாதன். இறைவி காசி விசாலாட்சி. ஒருநாள் அவர்கள் இருவரும் அமர்ந்து ஆன்மிக விஷயங்கள் பற்றி உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது காசி விஸ்வநாதர், "இந்த மனிதர்களை நாம் மிகவும் நம்பிக்கையுடன் தான் படைத்திருக்கிறோம். இருந்தாலும் அவர்களுக்குத்தான் போதிய நம்பிக்கை இல்லை. எதிலும் ஓர் உண்மையான நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்!" என்றார்.

அதைக்கேட்டதும் ஜகன்மாதாவாகிய விசாலாட்சி, 'என்ன அப்படி சொல்கிறீர்கள்? அதோ பாருங்கள்... எவ்வளவு பேர் காசியைத்தேடி வந்து கங்கையில் நீராடிக்கொண்டிருநக்கிறார்கள்! அவர்களுக்கெல்லாம் நம்பிக்கை இல்லாவிட்டால் இவ் வளவு தூரம் காசியைத் தேடிக்கொண்டு இங்கே வருவார்களா?" என்று வினவினாள்.

"சரி அதைச் சோதித்துப் பார்க்கலாம்' என்று இருவரும் முடிவு செய்தார்கள். உடனே ஒரு திட்டம் போட்டார்கள். அந்த திட்டம் இதுதான்:

நாம் இருவரும் பக்தர்கள் போன்று உருவத்தை மாறறிக்கொண்டு கங்கைக் கரைக்குப் போகலாம். நான் கங்கையில் இறங்கி குளிக்கிறேன். சிறிது நேரத்தில் நீர் சுழலில் மாட்டிக்கொண்டதுபோல் நான் நடிக்கிறேன். நீ உடனே கரையிலிருந்து சத்தம் போடு... 'என் கணவரை யாராவது காப்பாற்றுங்கள்!' என்று கூச்சல்போடு... அதோடு இன்னொன்றும் சொல்: 'யாராவது ஒரு புண்ணியாத்மா என் கணவரிடம் சென்று அவரது முடியைப் பிடித்துத் தூக்க வேண்டும். அப்படி ஒரு சாபமும் எங்களுக்கு இருக்கிறது. புண்ணியாத்மா... அதாவது, எந்தப் பாவமும் இல்லாத ஒருவர்தான் அவரைக் காப்பாற்ற முடியும்! அப்படிப்பட்டவர்கள் யாராவது வெள்ளத்தில் குதித்து என் கணவரைச் சீக்கிரம் காப்பாற்றுங்கள்!' என்று சொல்லிக் கூச்சல் போடு... பிறகு என்ன நடக்கிறது பார்க்கலாம்!' என்றார் கடவுள்.

அவ்விதம் ஜகன்மாதாவும் ஜகத் பிதாவும் சாதாரண பக்தர்கள் உருவத்தில் கங்கைக் கரைக்கு வந்தார்கள். இறைவன் கங்கையில் இறங்கி குளிக்க ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் திட்டம் போட்டது போலவே சுழலில் மாட்டிக்கொண்டவர் போல் கத்தினார். கரையில் இருந்த விசாலாட்சி தேவி, "ஐயோ, என் கணவரைக் காப்பாற்றுங்களேன்!' என்று அலறினாள்.

பலபேர் ஓடிவந்தார்கள் உடனே இறைவி 'பாவம இல்லாத புண்ணியாத்மா ஒருவரால் தான் என் கணவர் காப்பாற்றப்படவேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆதலால் புண்ணியாத்மா யாராவது அவரிடம் போய் அவரது முடியைப் பிடித்துத் தூக்கினால் அவரைக் காப்பாற்றி விடலாம்!" என்று தெரிவித்தாள்.

ஜகன்மாதா இப்படி கூறியதும் எல்லோரும் திகைத்துப்போய்நின்று விட்டார்கள். அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் செய்த பாவமெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வர ஆரம்பித்தது. 'சரி இதற்கு நாம் தகுதி இல்லை. என்று ஒவ்வொரு வரும் ஒதுங்கிப் போக ஆரம்பித்தார்கள். இந்தச் சமயத்தில் யாரோ ஒருவன் வேகமாக அங்கே ஓடி வந்தான். ஆற்றில் குதித்தான நீரில் மூழ்கும் நிலையில் இருந்தவரிடம் சென்றான். அவரது முடியைப் பிடித் துத் தூக்கினான். அவரைக் காப்பாற்றிக் கரையில் கொண்டுவந்து சேர்த்தான்.

அப்படிக் காப்பாற்றிய அந்த ஆளை... இவர்கள் இருவரும் தனியாக ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். "நீ யாரப்பா?" என்று எதுவும் தெரியா தவர்கள் போல் விசாரித்தார்கள்.

"நான் இந்த ஊர் அன்னசத்திரத்தில் வேலை செய்யும் ஒரு சமையல்காரன்" என்று அந்த ஆள் கூறினான். "நீ கங்கையில் குளிப்பதுண்டா?" என்று வினவினார்கள். நான் இந்த ஊரில்தான் இருக்கிறேன். இருந்தாலும் தினமும் கங்கையில் குளிப்பதில்லை. எப்போதாவது ஒரு நாள் அங்கே குளிப்பேன்!" என்றான் சமையல்காரன்.

'கங்கையில் மூழ்கி எழுந்தால் பாவம் தொலையும் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது அங்கே இன்றைக்கு கங்கையில் குளித்துக்கொண்டிருந்தவர்கள் எலலோரும் தங்களை புண்ணியாத்மாவாக நினைககவில்லை. கங்கையில் குளிக்காத நீ.. உன்னைப் புண்ணியாதமாவாக நினைத்து என் னைக்காப்பாற்றுவதாக வந்தாயே.. அது எபபடி" என்று இறைவன் கேட்டார் அதறகு அந்த ஆள், "கங்கையில் குதித்ததற்குப் பிறகுதானே உங்க ளைக் காப்பாறறப் போகிறோம்.. அப்படி குதிக்கும் போதே என் பாவமெல்லாம் போயிருக்குமே... நான் புண்ணியாத்மாவாக ஆகியிருப்பேனே... அதனால் தான் துணிந்து வந்து உங்களைக காப்பாற்றினேன்!" என்று பதில் கூறினான்.

பிறகு அவனுக்கு இறைவனும் இறைவியும் காட்சி கொடுத்தார்களாம். கங்கையில் குளித்துக்கொண்டிருபபவர்களுக்கே தங்களுடைய பாவம் போகும் என்ற நமபிககை பரிபூரணமாக இல்லை! குளிக்காத ஒருவனுக்கு அந்த நம்பிக்கை இருந்தது! அதனால் தான் அவனால் காசி விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் தரிசிக்க முடிந்தது.

நாம் நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதே இந்தக் கதையின் முக்கிய கருத்து.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆயுள்வேத மருத்துவ மனையை அமைத்து தாருங்கள்! மாந்தை கிழக்கு மக்கள் பிரதேச சபையிடம் வேண்டுகோள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தைகிழக்கு பிரதேசம் ஒரு பின்தங்கிய, அடிப்படை வசதிகள் அற்ற ஒரு பிரதேசமாகும். இங்கே வைத்திய வசதிகள் போதியளவில் இல்லாததால் மக்கள் ஓர் ஆயுள்வேத மருத்துவமனையை உருவாக்கித் தருமாறு பிரதேச சபையை நீண்டகாலமாகக் கேட்டவண்ணமுள்ளனர்.

இப்பிரதேசமானது அதிகஸ்ரப் பிரதேசமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுநிர்வாக அமைச்சால் இல 11 706/302/98ஆம் இலக்க 20.03.1991ஆம் திகதி சுற்றறிக்கை மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசமானது 494 சதுரகிலோமீற்றர் பரப்பையும் 16ஆயிரத்து 447 நிரந்தர மக்கள் தொகையையும் 3 ஆயிரத்து 723 குடும்பங்களையும், வெளிமாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து ஆயிரத்து 521 குடும்பத்தில் 7 ஆயிரத்து 2114 அங்கத்தவர்களையும், 15 கிராம சேவையாளர் பிரிவுகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு பாரிய பரந்த பிரதேசமே இப் பிரதேசமாகும்.

இப் பிரதேசத்தில் 1951ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு சிறிய அரசாங்க வைத்தியசாலையே இயங்கி வருகின்றது. இவ் வைத்தியசாலையானது இப்பிரதேசத்தில் உள்ள 63 கிராம மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அளவில் இல்லை. மேலும் அயற்கிராம மக்களும் இப் பிரதேசத்திற்கே வைத்தியவசதிக்காக வரவேண்டியவர்களாகவுள்ளனர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் எல்லைக் கிராமத்திலுள்ள மக்களும், வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராம மக்களும், மாந்தைகிழக்கு பிரதேசத்திலுள்ள இவ் நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கே வரவேண்டும். ஆனால் இங்குள்ள சிறிய வைத்தியசாலை போதிய மருத்துவ வசதிகளின்றி இருப்பதால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைக்கு 72 கிலோமீற்றர் தூரத்தையும் அல்லது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு 56 கிலோமீற்றர் தூரத்தையும் கடந்து செல்ல வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையில் இப்பிரதேச மக்கள் உள்ளனர்.

ஆனால் சகல வசதிகளையும் கொண்ட மாங்குளத்திற்கு அப்பாலுள்ள பிரதேசங்களான கரைதுரைப் பற்று, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் போதிய வசதிகள் கொண்ட அரசாங்க வைத்தியசாலைகளுடன் ஆயுள்வேத மருத்துவமனைகளும் செயற்படுவதால் அப்பகுதி மக்கள் தங்கள் வைத்தியதேவையை மிக இலகுவாக பூர்த்திசெய்யக்கூடியதாக உள்ளது.

ஆகவே இந்தவகையில் மாந்தை கிழக்கு பிரதேசம் ஒரு புறக்கணிக்கப்பட்ட பிரதேசமாகவே கருதப்படுகின்றது. இங்கு ஆயுள்வேத மருத்துவமனை உருவாக்கப்பட்டு,, மருத்துவருக்குரிய ஆளணியையும் உருவாக்கி இப்பிரதேச மக்களது நீண்டகால கோரிக்கையும், குறைபாட்டையும் நிவர்த்திசெய்ய வேண்டிய கடமை மாந்தைகிழக்கு பிரதேசசபைக்கே உண்டு.

இப்பிரதேசமானது 1977ஆம் ஆண்டுக்கு முன் மன்னார் மாவட்டத்துடனும், 1977ஆம் ஆண்டுக்குப் பின் முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டபோது அம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதாயினும் மக்கள் நிலைப்பாடும், இப்பிரதேசத்தின் முன்னேற்றமும் எந்த வகையிலும் அபிவிருத்தியடையவில்லை.

ஆதலால் இவ் விடயத்தில் அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் கவனமெடுத்து இப்பிரதேச அபிவிருத்திக்கு துணைபுரிய வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (க-128)

## குரு பூர்ணிமா விழா

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சரமத்தில் இன்று திங்கட்கிழமை குரு பூர்ணிமா விழா நடைபெறவுள்ளது.

சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் இவ்வைபவம் இடம்பெறும். இன்றைய தினம் பகல் சேவாச்சிரமத்தில் விசேட பஜனைகளும் பூசைகளும் இடம்பெறவுள்ளன.

மாலை சேவாச்சிரமத்தின் அறக்கொடைத்திட்டச் சான்றிதழ் வழங்கல், சுய தொழில்முயற்சித்திட்டத்திற்கான தையல் மெசின் வழங்கல் நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (க-55)

## அரச ஊழியர்களுக்கு 2ஆம் மொழியில் பயிற்சி

(கொழும்பு)

அரசதுறை ஊழியர்களுக்கு இரண்டாம் மொழி யில் பயிற்சி அளிப்பதற்கான அவசர திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டவர்கள் தமிழ்மொழியை கற்பதற்கும் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் சிங்கள மொழியை கற்பதற்கும் ஆவன செய்வதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் டி.ஈ.டபிள்யூ குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரச துறையில் மொழி பெயர்ப்பாளர்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநேகமான மொழி பெயர்ப்பாளர்கள் தமது பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றதினாலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே இரு மொழிகளிலும் ஊழியர்கள் பயிற்சியைப் பெறுவதற்காகவும், அரச சேவையில் புதிதாக சேர்த் துக்கொள்ளப்படுபவர்கள் இரு மொழிகளையும் கற்றுக்கொள்வதற்காகவும், இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இரு மொழிகளிலும் பரீட்சயம் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வும், ஊக்குவிப்பும் மற்றும் அனுகூலங்களும் வழங்கப்படவுள்ளன. அரச துறையில் தொழில் தரங்களில் மொழிபெயர்ப்பாளர்களை அதிகூடிய தரத்தில் தரப்படுத்துவதற்கும் இந்த மாற்றுமொழி திட்டத்தை பயன்படுத்தமுடியும்.

இந்தத் திட்டத்தின்படி மொழிபெயர்ப்பாளர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 25 ஆயிரம் ரூபா வரை நிர்ணயிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அரசதுறை ஊழியர்களுக்கு 2 ஆம் மொழியில் பயிற்சி வழங்குவதற்காக ஒரு பயிற்சி நிறுவனத்தை நிறுவ பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

## வேலையில்லாமல் திண்டாடுவோர் உலகளாவிய ரீதியில் 20 கோடிபேர்

(கொழும்பு)

உலக அளவில் வேலையில்லாமல் திண்டாடுபவர்களின் எண்ணிக்கை 20 கோடி என்றும் இது மேலும் அதிகரிக்கும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சி லின் ஆண்டறிக்கைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. இதில் தனது அறிக்கையை சமர்பித்து பேசிய ஐ. நா.பொதுச் செய லாளர் கோபி அனான் கூறிய தாவது,

உலக அளவில் வேலையில்லாமல் திண்டாடுபவர்களின் எண்ணிக்கை கடந்த 2005ஆம் ஆண்டு 20கோடியாக இருந்தது. வரும் ஆண்டுகளில் இது அதிகளவில் உயரக் கூடும். வேலையில்லாமல் திண்டாடுபவர்களில் பாதிப்பேர் இளைய சமுதாயத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அநேகமானோர் மூன்று முறை உழைக்கும் பணியில் இருந்தாலும் அவர்கள் வறுமையிலிருந்து விடுபட முடியவில்லை. வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு நல்ல வேலையளிப்பதன் மூலம் ஆண்களுக்கும் பெண்களுக்கும்வேலைவாய்ப்பைபெருக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

சுதந்திரமான, பாதுகாப்பான மற்றும் கௌரவமான வேலையை இரு பாலருக்கும் அளிப்பதில் உடனடியாக நாம் கவனம் செலுத்த வேண்டும். இது வேலைப் பிரச்சினை மட்டுமல்ல தனி நபர் மற்றும் குடும்பத்தினருக்கு போதுமான வருமா னத்தை அளிப்பதன் மூலம் அவர் கள் வறுமையிலிருந்து விடுபடவும் வழிவகை செய்யும் என்றார். (த-9)


## விபரங்களை அறியமுடியாத நிலையில் யாழ்.தொல்பொருட் காட்சிச் சாலை

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் தொல்பொருள் காட்சி சாலையில் பேணப்பட்டுவரும் பொருட்களின் பெயர், மற்றும் விவரங்கள் குறிப்பிடப்படாததால் அங்கு செல்வோர் அவை பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளமுடியாமல் இருக்கிறது தவிர, கடமையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களுக்கும் விபரங்கள் பற்றிய பூரண அறிவு இல்லாமையால் பார்வையாளர்களால் பொருட்களின் பெயர் எக் காலப்பகுதிக்குரியவை, அவை பயன்படுத்தப்பட்ட முறைகள், தேவைகள் போன்ற விபரங்களை அறிய முடியவில்லை. திமிங்கலம் ஒன்றின் எலும்புக் கூடு கட்டடத்திற்கு வெளியே மழையில் நனைந்தும் வெய்யிலில் உலர்ந்தும் நாளுக்கு நாள் பழுதடைந்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி தொல்பொருள் காட்சிச் சாலைக்கு வருபவர்கள் தேவையான விபரங்களை உடனுக்குடன் அறிந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் அங்கு வருபவர்களுக்கு குறிப்பாக ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (து-36)

# அருணகிரிநாதர் புகழ்பாடி மகிழ்ந்த பொலிகண்டி கந்தவன ஆலயம்!




(பருத்தித்துறை)

அருணகிரிநாதரால் திருப்புகழால் புகழ்ந்து பாடப்பெற்ற பொலிகண்டி கந்தவன ஆலய தீர்த்தோற்சவம் இன்றாகும்.

பொலிகண்டி கந்தவன முருகன் பாக்கு நீரிணைக் கரையிலே பொலிகண்டியிலே அமர்ந்திருக்கின்றார். ஆறுபடை வீடுகளில் இவ் ஆலயமும் ஒன்றாகும். முருகவனம், கந்தவனக்கடவை, கந்தவனம்ஸ்கந்தாரண்யம், கந்தசுவாமி கானம் என்ற பெயர்களால் பக்த அடியார்களால் இவ் ஆலயம் அழைக்கப்படுகின்றது.

வடமொழி ஸ்கந்தபுராணத்தின் பகுதியான தக்ஷிண கைலாய மான்மியத்தில் இவ் ஆலயம் பற்றிக் காணப்படுவதால் இவ் ஆலயம் கந்தபுராணம் தோன்றுவதற்கு முன்னர் தோன்றியுள்ளது என்பது புலனாகின்றது.

முருகப் பெருமான் சூரனாதியர்களை அழித்து வள்ளி, தெய்வானை இருசக்திகளையும் மணந்து பல தலங்களுக்குச் சென்று இலங்கையில் கதிர்காமம் செல்ல விரும்பி மரக்கலத்திலே காங்கேசன்துறையை அமைத்து அங்கிருந்து பொலிகண்டிக் கரையை அடைந்தார்.

அங்கு வன்னி மரங்கள் அடர்ந்திருந்த பொலிகண்டியில் கோயில் கொண்டெழுந்தருள விரும்பினார். இவரின் விருப்பத்திற்கிணங்க விசுவகன்மா ஆகம முறைப்படி ஆலயத்தையமைத்து முடிக்க எம்பெருமான் அங்கு தேவியர்களுடன் எழுந்தருளினார்.

இத்திருத்தலத்திற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளும் பொருந்தியுள்ளன. இங்குள்ள முருகப்பெருமான் 'கல்யாண வேலவர்' என அழைக்கப்படுகிறார். இவ் ஆலய விருட்சம் வன்னி மரமாகும். இத்திருத்தலத்திற்கு யாத்திரை செய்த அருணகிரிநாதர் 'உறவு சிங்கிகள்' என்ற திருப்புகழைப் பாடியுள்ளார்.

இவ் ஆலயத்தில் உள்ள ஆறுமுக விக்கிரகமான 'பழையவர்' சோழர் கால ஆட்சியில் சிலப்ப முனிவரால் வடிக்கப்பட்டதாகும். இங்குள்ள 'ஆறுமுகநயினார்' எழுந்தருளி தனிப்பெருஞ்சிறப்புப் பெற்றது.

இப்பெருமானின் நறுநீர்க்கேணியின் நடுவிலே உள்ள கல்லில் கற்பூரம் விளைந்ததாகக் கூறப்படுகிறது. இக்கேணியில் நீராடி அந்நீரை அருந்துபவர்களுக்குச் சகல ரோகங்களும் நீங்கும் என்ற நம்பிக்கை இன்றும் உண்டு.

இவ் ஆலயத்தின் உள் வீதியில் நின்ற 'காஞ்சிமா' என்ற மாமரத்தின் இனிய கனிகளை உண்டு கந்தவனப் பெருமானை நினைத்து விரதமிருப்பவர்களுக்கு குழந்தைப் பாக்கியங்களும் கிடைத்து வந்துள்ளன. அம்மரத்தின் கன்று இன்றும் ஆலய வடமேற்கு மூலையில் உள்ளது.

இக்கோவில் மீது மகான்களும், யோகி

**திருச்செல்வம்**

களும், கல்விமான்களும் பிரபந்தங்கள் பாடியுள்ளனர். அருணகிரிநாதர் திருப்புகழாலும், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆகியோர் நான்மணிமாலையாலும் பாடியுள்ளனர்.

தமிழ்நாடு வெங்கட்ராமன் கந்தவனக் கலம்பகத்தையும், சி.வா.ஜகந்நாதன் தனிப் பாமாலையும், வீகாமும்புத்துறை சிவயோக சுவாமிகள் 'ஆடும்மயிலே' என்னும் பாடலையும் இத்தலத்தின் மீது பாடியுள்ளார். இவ் வகைச் சிறப்புக்களைக் கொண்ட இக்கோவிலைத் திக்கம் செல்லையா பிள்ளை பரம்பரையினர் பரிபாலித்து வருகின்றனர்.

நேற்று தேரேறி உலாவந்த பெருமான் இன்று தீர்த்தமாடுகிறார். பக்த அடியார்கள் அருளைப் பெற்று உயர்வார்களாக.

## வீதிகள் புனரமைப்பு

(கோண்டாவில்)

2006ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியைப் பயன்படுத்தி நல்லூர் பிரதேச சபையினால் மகாத்மாஜி சனசமூக நிலையம், கொக்குவில் வராகி சனசமூக நிலையம் என்பன புனரமைக்கப்படவுள்ளதுடன் கோண்டாவில் பொது நூலகத்திற்கான தளபாடக் கொள்வனவும் மேற்கொள்ளப்படவுள்ளது. இவற்றிற்கான மதிப்பீடுகள் யாழ். செயலகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டுக்கான தமது சபை நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி ஆறுமுகம் வீதி, குளங்கரை வீதி, ஆனைவிழுந்தான் வீதி, சந்திரசேகரப் பிள்ளையார் வீதி, பாரதி குறுக்குவீதி, இராஜேஸ்வரி வீதி, பிரம்படி முதலாம் குறுக்குவீதி, சத்தார் வீதி, கலாசாலை முதலாம் குறுக்குவீதி ஆகியவற்றைப் புனரமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் திட்டமிடல் உதவி அதிகாரி கு.தவசோதி தெரிவித்துள்ளார். (து-36)

## பதிவுகளை மேற்கொள்க!

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் இலவச ஆங்கில பயிற்சி வகுப்புகள் இரண்டு கட்டங்களாக நடாத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூன்றாவது கட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி சாவகச்சேரி யா/டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் சாவகச்சேரி டச்சு வீதியில் இருக்கும் லயன். எம்.பி. சண்முகநாதனிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கழகத் தலைவர் லயன். வ.ஸ்ரீபிரகாஸ் கேட்டுள்ளார்.

இவ் வகுப்புகள் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறும் எனக் கூறப்படுகின்றது. (க-37)

# கடத்தப்பட்ட புனர்வாழ்வுக்கழக பணியாளர் விடுவிக்கப்பட்டார்

வாழைச்சேனைப் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர் கிருஷ்ண பிள்ளை கமலநாதன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை கடத்தப்பட்டவர்களினால் இவர் விடுவிக்கப்பட்டுள்ளார். கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினரை விடுவிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. ஈழவேந்தன் பாராளுமன்றத்தில் உரையாற்றியதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் தொலைபேசியூடாக இவ்விடயம் குறித்து பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# சமாதான முயற்சிகள் தடைப்படுவதற்கு அரசியல் முரண்பாடுகளே காரணமாம்

**ராதிகா குமாரசாமி சுட்டிக்காட்டு**

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலேயே தீர்வுகாணப்பட வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர்கள் மற்றும் ஆயுதப் பிணக்கு தொடர்பான பிரதிநிதி ராதிகா குமாரசாமி தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றிற்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம்களின் அபிலாசைகளை மறந்து விடமுடியாது. சமாதானத்திற்கு எதிரான சக்திகளாக இலங்கையின் அரசியல் முரண்பாடுகளே காணப்படுகின்றன. இதனால் முதலில் இந்த அரசியல் முரண்பாடுகளை களைய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை இலங்கையின் இறைமைக்கு உட்பட்டவாறு சமாதான செயற்பாடுகள் அமைய வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் சர்வதேசத்தின் தலையீடு சாதகமாக அமைந்துள்ளது எனினும் சில நாடுகளின் தீவிரவாத கருத்துக்கள் நாட்டில் பாதுகாப்பின்மையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# ஆடி மாத விசேட உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆடிமாத உற்சவங்கள் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளன.


எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆடிப்பிறப்பு சங்கிராந்தி சங்காபிஷேகத்துடன் உற்சவங்கள் ஆரம்பமாகின்றன. 18ஆம் திகதி தொடங்கி அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை ஐந்து செவ்வாய்க் கிழமைகளும் காலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், 7 மணிக்கு பூசை, மு.ப 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், 11 மணிக்கு பூசை, 11.30 மணிக்கு அம்பாள் திருவீதியுலா, 12.30 மணிக்கு அன்னதானம், மாலை 4 மணிக்கு பூசையும் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இதேவேளை யூலை மாதம் 24ஆம் திகதி திங்கட்கிழமை ஆடி அமாவாசை விசேட உற்சவம், 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம் அபிஷேகம் திருவிழா, ஆகஸ்ட் 2ஆம் திதகி புதன்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, வெள்ளானைச் சருக்கம் படித்தல், 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்- விழா 9ஆம் திகதி புதன்கிழமை ஆடிமாதப் பூரணைத்திருவிழா என்பனவும் நடைபெறவுள்ளதாக தேவஸ்தானம் அறிவித்துள்ளது. (அ)

# றோ.க.த. பாடசாலை மாணவிக்கு தங்கப் பதக்கம்

கடந்த வருடம் நடாத்தப்பட்ட யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க திருமுறைக் கல்வித் தேர்வில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் 5இல் கல்வி கற்கும் மாணவி செல்வி அகஸ்ரின் மிதுர்ஷா மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

அதிக கஷ்டப் பகுதியான வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் கல்வி கற்று முதல் இடத்தைப் பெற்றுக்கொண்ட மேற்படி மாணவிக்கு கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்துள்ளமை மாணவியின் பெற்றோருக்கும் பாடசாலைக்கும் பெருமையைப் பெற்றுக் கொடுத்துள்ளது. (க-101)


இளைப்பாறிய உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் கே.நடராசாவுக்கு கல்லூரிச் சமூகத்தால் நடாத்தப்பட்ட மணி விழாவில் நடராசா தம்பதிகள் ஆலயத்திலிருந்து கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்படுவதையும், அருட்திரு எஸ்.வசந்தகுமார் அடிகளார் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், கல்லூரியின் கனடாக் கிளைத் தலைவர் கலாநிதி கே.வசந்தகுமார் உரையாற்றுவதையும், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், திருமதி நடராசா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பரு.நிருபர்)

# எமது உரிமையை போராடியே பெறவேண்டும்

## அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் மலரவன்

மனிதர்கள் எல்லோரும் வாழ்கின்றார்கள் வாழ்ந்து மடிகின்றார்கள். போராளிகள் விடுதலைக்காக (போ)ராடி வீரமரணமடைகின்றார்கள். ஆனால் கரும்புலி போராளிகள் வாழ்க்கை ஒரு வித்தியாசமானது, அபூர்வமானது.

அதனால் தான் அவர்களின் நினைவுநாள் ஒரு புனிதமான நன்நாள். இந்தக் கரும்புலிகள் போற்றப்படவேண்டியவர்கள் மட்டுமல்ல வணக்கத்திற்குரியவர்கள், புனிதமானவர்கள். அவர்களை நினைவு கூர்ந்து வணங்கவேண்டியது ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

இவ்வாறு கரும்புலிகளின் நினைவு தினத்தை முன்னிட்டு மாந்தைகிழக்கு பிரதேசத்தில் பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நினைவுதின வைபவத்தின்போது உரையாற்றியபிரதேச அரசியல்துறைதுணைப் (பொறு)ப்பாளர் மலரவன் மாஸ்ரர் தெரிவித்தார். இவ் விழாவானது அரசியல்துறையைச் சேர்ந்த மறவனின் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்கு முன்னதாக அரசியல்துறையைச் சேர்ந்த கைலாயதாஸ் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, மாவீரரின் தாயாரான சரஸ்வதியால் ஈகைச்சுடரேற்றப்பட்டு மாணவர்களாலும் பொதுமக்களாலும் மலர்வணக்கம் செலுத்தப்பட்டது. பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட இவ் விழாவில் மலரவன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாங்கள் இன்று முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். சமாதான காலமான நான்கு வருடங்களை போராட்ட வரலாற்றில் வீணாக்கிவிட்டோம். அதன் நிமித்தமே இன்று எமது மக்கள் எல்லோரும் போராட்டத்தில்ஈடுபட பயிற்சி எடுத்து போருக்காகத் தயாராகிக்கொண்டிருக்கின்றார்கள்.

எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் 1987ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு திரும்புமுனையே கரும்புலி மில்லர் காட்டிய வழியாகும். இன்று சர்வதேசமே வியக்கும் வகையில் எமது கரும்புலி போராளிகள் போராட்ட வரலாறு வளர்ச்சியும், எழுச்சியும் கண்டுள்ளது.

நாள்குறிக்கப்பட்டு, நேரம் தீர்மானிக்கப்பட்டு மரணம் வரப்போகின்றது என எண்ணிக்கொண்டு ஒரு போராளி போர்க்களத்தில் இறங்கும்போது அவனதுமனநிலை, மனோதைரியம் எவ்வாறு இருக்கும் என்று எவராலும் எண்ணிப் பார்க்கவோ கற்பனை செய்துபார்க்கவோ முடியாது. அந்தளவிற்கு கரும்புலிப் போராளிகளின் வீரம் மகத்தானது. அவர்கள் எமது தெய்வங்களே. அதனால்தான் நாம் அவர்களைப் போற்றி வணங்குகின்றோம். இன்றைக்கு 18, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களையும் 273 இற்கு மேற்பட்ட கரும்புலி மாவீரர்களையும் விடுதலைப் போராட்டத்திற்கு வித்தாக்கிவிட்டோம்.

நாம் எமது உரிமையைப் போரா டியே பெறவேண்டும். எந்த சிங்கள அரசாங்கமும் எமக்கு எதையும் தரப்போவதில்லை. இது கடந்த கால வரலாறுகள் சுட்டிக்காட்டும் உண்மையாகும். கடந்த காலங் களில் அகிம்சைவழியிலான போராட்டங்களை தந்தை செல்வா தலைமையிலே நடத்தினோம்.

ஆனால் பலமுறை தந்தை செல்வநாயகம் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டுவிட்டார். அதனால்தான் இறுதியாக அவர் பாராளுமன்றத்திலே கூடும்போது நாங்கள் அகிம்சை வழியிலே போராடுகின்றோம். எமது உரிமையை எங்களிடம் தாருங்கள்.

'இது தவறுமாகவிருந்தால் எமது அடுத்த சந்ததி ஆயுத மேந்தியே போராடும்' என்பதை அன்று மிக ஆணித்தரமாக சிங்களத் தலைவர்களுக்கு எடுத்துரைத்தார் தந்தை செல்வ நாயகம்.

அது மட்டுமல்லாது தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று அவர் உதித்த பொன்மொழிக்கு இசையவே எமது விடுதலையைவென்றெடுக்கவேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு அவதாரப் புருசனாக உதித்துள்ளார் என்பதைநாம் இன்று உணர்கின்றோம். எனவே எமது தவைரது காலத்திலே நாம் அனைவரும் ஒன்று திரண்டு எமது உரிமையை வென் றெடுத்து எமது மாவீரர்களினது விடுதலைக் கனவை நனவாக்க வேண்டியது அனைவரினதும் தலையான கடமையாகும் என அவரது உரையிலே மேலும்தெரிவித்தார். (க-128)

# இராணுவ இரகசியங்களை வெளியிட்ட இராணுவ அதிகாரியை விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

இராணுவம் மற்றும் பொலிஸ் இரகசியங்களை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட இராணுவ தொண்டர் படையணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரை தடுத்துவைத்து விசாரணை செய்ய குற்றப்புலனாய்வு நிலைக் கழகத்திற்கு அனுமதி கிடைத்துள் ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள இந்த சந்தேகநபர் 1995இல் இராணுவ தொண்டர் அணியில் இணைந்து 2003இல் ஓய்வு பெற்றுள்ளார்.

இந்த சந்தேக நபர் கிளிநொச்சிக்கு சென்று இராணுவத்தின் இரகசியங்களையும், இராணுவ அதிகாரிகளின் பயண விபரங்களையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உளவாளி ஒருவருக்கு வழங்கியுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர் பயன்படுத்திய கையடக்க தொலைபேசியின் ஊடாக தொடர்புகொண்ட இலக்கங்கள் மற்றும் உள்வந்த தொலைபேசி அழைப்புக்கள் ஆகியவற்றை ஆராய குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (க-9)

# யோகாசனப் பயிற்சி வகுப்புகள்

சிவலிங்க யோக கேந்திர நிலையம் வளர்மதி சனசமுக நிலையத்(தி)ன் ஆதரவுடன் நடக்கும் யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் சம்பியன் லேனில் உள்ள வளர்மதி சனசமுக நிலையத்தில் எஸ்.சோதி மூர்த்தி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யோகாசன போதன ஆசிரியர் வி.ஏ.சிவனேசராசா அறிமுகவுரை நிகழ்த்தவுள்ளார். யோக ஆச்சாரியாரான யோகிராஜன் 'யோகமும் வாழ் வும்' எனும் விடயம் குறித்து கருத்துரை வழங்குவார்.

இதேவேளை, இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் சிவலிங்கயோக கேந்திரா, யாழ்ப்பாணம், இலங்கை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும், இப்பயிற்சி வகுப்புக்கள் மூன்று மாதங்கள் நடைபெறும் இதில் இரு பாலாரும் கலந்து கொள்ளலாம். இப் பயிற்சி வகுப்புக்களை புராணமாக முடிப்பவருக்கு சிவலிங்க யோககேந்திர சான்றிதழ் வழங்கப்படும். (க-7)

# நல்லூர் பிரதேச சபையின் வேலைத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி ஆணையாளரினால் நல்லூர் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட மூலதன நன் கொடை நிதியைப் பயன்படுத்தி பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. கொக்குவில் நந்தாவில் வீதி, கோண்டா வில் காரைக்கால் வீதி, திருநெல்வேலி கலாசாலை நான்காம் குறுக்குவீதி, இராமலிங்கம் (கெனடி) வீதி என்பன கல்லிட்டு தாரிடப்படுவ்தற்கான மதிப்பீடுகளும், திருநெல்வேலி மகாத்மா வீதிக்கான மின் இணைப்பு வேலை, கொக்குவில் பொதுச் சந்தையில் மலசலகூடம் அமைத்தல் என்பவற்றிற்கான மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளூராட்சிஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவரது அங்கீகாரம் கிடைத்ததும் வேலைத்திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என நல்லூர் பிரதேச சபையின் திட்டமிடல் உதவியாளர் கு.தவசோதி தெரிவித்துள்ளார். (து-36)

# வினாடி வினாப் போட்டிகள்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி வலயத்திற்கு உட்பட்ட ஆண்டு 6 முதல் 11ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களுக்கான தமிழ்மொழி மூலமான விஞ்ஞான கணித வினாடி வினா போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான சுட்டென்கள் போட்டி நடைபெறும் அன் றைய தினம் வழங்கப்படும் என தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (க-37)

# தீர்த்தத் திருவிழா

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை சித்தி விநாயகராலய வருடாந்த மகோற்சவம் கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்று தேர்த்திருவிழா இடம்பெற்றது.

இன்று தீர்த்தத் திருவிழாவும் நாளை பூங்காவனத் திருவிழாவும் நாளை மறுதினம் 12ஆம் திகதி வைரவர் மடையும் நடையெறவுள்ளது. (க-52)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்







## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று தீர்த்தத் திருவிழா

### நிறைகின்ற வெண் திங்களோ?

உறைகின்ற நின்திருக்கோயில் நின்
கேள்வர் ஒரு பக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ
முமியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ
கஞ்சகமோ என்தன் நெஞ்சகமோ
மறை கின்ற வாரிதி யோ பூர
ணாசல மங்கலையே!

*அபிராமி அந்தாதி*

### அன்னையினைத் தொழுதிடுவோம்

வினையகற்றி காத்திடுவாள் தீர்த்தமாடி
விடுதலையைத் தந்தடுவாள் தீர்த்தமாடி
மனையருளைப் போக்கிடுவாள் தீர்த்தமாடி
மகிழ்வு தனை அளித்திடுவாள் தீர்த்தமாடி
நினைப்பவர்க்கு ஜெயமளிப்பாள் தீர்த்தமாடி
நிம்மதிக்கு வழியமைப்பாள் தீர்த்தமாடி
அனைவருக்கும் துணையிருப்பாள் தீர்த்தமாடி
அன்னையினைத் தொழு திடுவோம் தீர்த்தமாடி!

*மு.முத்துக்குமார்*

### கண்ணகையே அருள் தாருமம்மா

நீல விழிதனை உடையவளே
நித்தம் அரவுடன் நிற்பவளே
கோல வடிவுடல் கொண்டவளே
குஞ்சரியே புவனேஸ்வரியே
ஆலகா வவிடம் உண்டவனின்
ஆர ணங்கே அம்பிகையே
கால மெலாமெமைக் காப்பவளே
கண்ணகை யேயருள் தாருமம்மா

*கவிஞர் வ.யோகானந்தசிவம்*

### கோடிநலம் புரிவாயோ அம்மா

நயினைத் தீவின் வட பாலமைந்த
புளியந்தீவில் நாகேஸ்வரன் வாசமுறு
நந்தவனத்தினில் மலரினைப் பறித்த நாகம்
விரைவினில் கடலைத் தாண்ட முற்பட்டகால்
வலியுறு கருடன் பின் தொடர்ந்தேகிட
இன்னலுற்று அரவு கல்லொன்றில் சுற்றியதாம்!
மரக்கலம் ஏகிடம் பெரும் வணிகள் வேசிகள்
இறைஞ்சி அம்பிகைக்கு திரவியங்கள் அளித்து
கல்லினின்று கருடனை அகன்றிட வழிசெய்ய
இன்புடன் அரவு நயினைப்பதி நீந்தியடைந்து
மலரினைச் சூட்டிட மகிழ்ந்து அம்பிகை
நாகபுஷணியாகி எம்குறைகள் தீர்த்து
கோடிநலம் செய்கின்றாள் சரணைந்தோமே

*நயினை விஜயன்*

### நமக்கினிப் பயமேன்?

அன்னையில் வீற்றிருந்தே நல்லாட்சி புரியும் தாயே
நமக்குள் புரிவாய் அம்மா நாகேஸ்வரி நீயே
உன்னருள் வேண்டும் அம்மா கடைக்கண் பாராய் நீயே
கயிலையில் பூஜிப்பது போல் எமக்குக் காட்சிதரும் தேவி
தைதொழுதே துதித்தோம் காத்தருள் புரிவாய் அம்மா
மயிலையில் கற்பகம் போல் நயினையில் நாகபூஷணியாய்
மாண்புடன் நீயிருக்க நமக்கினிப் பயம் எதற்கு?


*சிவநெறிக் கலாநிதி. இர்ாசையா ஸ்ரீதரன்*

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை

முருக-தனுஷ்கோடி

22



'சேனைகளின் பலமும் பலவீனமும் தளபதிக்குத் தெரிந்தால்தான் அவன் தளபதி; தன் பலமும் பலவீனமும், தன் காரியங்களின் சக்தியும் சக்தியின்மையும், தன் தொண்டர்களின் கட்டுப்பாடும் சிதறலும் அவ்வப்போது தெரிந்து கொள்பவன்தான் தலைவன்; வேறு புறச்சிந்தனைகள் இல்லாமல் முகபடாம் போட்ட குதிரையைப் போல் போகின்ற சாலையையே கவனித்துக் கவனித்துப் போகின்றவனே நல்ல தலைவன்.'

தமிழ்நாட்டில் ராஜாஜிக்கும் காமராஜுக்கும் இடையே அரசியல் மற்போர் நடந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. ராஜாஜிக்கு ஆரம்ப கட்டங்களில் அகில இந்தியத் தலைவர்களின் ஆதரவு பலமாக இருந்தது. காமராஜுக்கு அஸ்திவாரம் பலமாக இருந்தது. தொண்டர்களின் உறுதியான ஆதரவு இருந்தது. அதனால், யாராலும் அவரை அசைக்க முடியவில்லை.

## 14. தமிழ்நாட்டில் காந்திஜி

'காமராஜ் விவேகமுள்ள தகுதிவாய்ந்த நாணயமான மனிதர்' தலைவரைப் பற்றி ராஜாஜி கூறியது இது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன் அதாவது 1966ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் திகதி ராஜாஜி இவ்வாறு கூறினார். மூதறிஞர் ராஜாஜி கூறிய இந்தப் புகழுரை இன்னும் என மனத்தில் பசுமையாக இருக்கிறது. 29 ஆண்டுகளுக்கு முன்னால் காமராஜ் ராஜாஜிக்கிடையே இடைவெளி அதிகமாகியிருந்ததை இனி நான் எழுதப்போவதால் இந்தப் பீடிகையுடன் 1946ஆம் ஆண்டில் நடந்ததை எழுதுகிறேன்.

1946ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காந்திஜி கல்கத்தாவில் இருந்து சென்னைக்கு ஹிந்தி பிரச்சாரசபை வெள்ளிவிழாவுக்குத் தலைமைதாங்க வந்தார். 21ஆம் திகதி சென்னைக்கு வந்த அவர் ரயிலை விட்டு எங்கு இறங்குகிறார் என்பது பரமரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. காந்திஜி இறங்கும் இடம் தெரிந்துவிட்டால் மக்கள் கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் போய்விடும். சிறிது உடல் நலமின்றி இருக்கும் காந்திஜிக்கும் அது சௌகரியமாக இராது என்று எண்ணியதால் அவர் இறங்கும் இடம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. ரயிலில் இருந்து காந்திஜியை அவர் சென்னையில் தங்கும் இடம்வரை கூட்டிக்கொண்டுபோய்ச் சேர்க்கும் பொறுப்பை பொலிஸார் ஏற்றிருந்தனர். ரயிலை எங்கு நிறுத்த வேண்டும். எந்த இடத்தில் காந்திஜியை இறக்கி அவருக்கு பாதுகாப்புத் தர வேண்டும் என்ற பொறுப்பும் பொலிசாருக்கு இருந்தது.

சென்னையில் உள்ள ஹிந்தி பிரச்சாரசபை அருகில் காந்திஜி தங்குவதுங்கு இடம் வசதி செய்யப்பட்டிருந்தது. அந்த இடத்திற்குப் பொலிஸ் அதிகாரி ஒருவர் போனார். காந்திஜியை வரவேற்க யார் யார் வருகிறார்கள் என்ற விவரத்தைச் சேகரிக்கவே அவர் அங்கு போனார்.

காந்திஜி எந்த இடத்தில் இறங்குவார் என்பது ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததால் பத்திரிகை நிருபர்கள் உஷார் ஆனார்கள் காந்திஜி இறங்கும் இடத்தைத் தெரிந்து கொள்ள அவர்கள் ஹிந்தி பிரச்சார சபையை முற்றுகையிட்டனர்.

காந்திஜி எந்த நேரத்தில் எந்த இடத்தில் ரயிலை விட்டு இறங்குவார் என்பது ராஜாஜிக்குத் தெரியும். ஆனால் இதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராய் இருந்த காமராஜிடம் ராஜாஜி சொல்லவில்லை. காந்திஜியை வரவேற்க எப்போது புறப்பட வேண்டும் என்பதையும் ராஜாஜி காமராஜுக்குத் தெரியப்படுத்தவில்லை. முழுப்பூஷணியைச் சோற்றில் மறைக்கப்பார்த்தார். ராஜாஜி.

மாலையில் ஒரு பொலிஸ் அதிகாரி வந்தார் காந்திஜியை ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்க இருக்கும் தலைவர்களை அவர் அழைத்தார். அந்தப் பொலிஸ் அதிகாரியுடன் ராஜாஜி காந்திஜியை வரவேற்க புறப்பட்டுச் சென்றார். போகும்போதும் காமராஜை ராஜாஜி அழைத்துப் போகவில்லை. என் .கோபாலசாமி ஐயங்கார் ஹிந்தி பிரச்சார சபைச் செயலாளர் சத்திய நாராயணா ஆகியோரையே ராஜாஜி தம்முடன் அழைத்துச் சென்றார். காமராஜ் ஹிந்தி பிரச்சார சபைக்கு வந்ததும் துணுக்குற்றார்! காந்திஜியை வரவேற்க ராஜாஜியும் மற்றும் சிலரும் தன்னிடம் சொல்லாமல் புறப்பட்டுப் போய்விட்டதைத் தெரிந்து கொண்டார்.

காந்திஜி வரும் விசேஷ ரயில் எந்த ரயில்வே ஸ்டேஷனில் நிற்கும். அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்று எண்ணியதும் சிறிது நேரம் திகைத்து நின்றார். அப்போது அங்கு நிருபர் கணபதி காரில் வந்து சேர்ந்தார். நிருபர்களுக்கு எப்போதும் ஒரு விஷயத்தில் அலாதிச்சுவை உண்டு. ரகசியச் சந்திப்பு போன்றவைகளில் விசேஷக் கவனம் செலுத்துவார்கள். துப்பறிபவர்களுக்குச் சவால் விட்டு இரகசியத்தைச் சந்திக்குக் கொண்டு வருவதில் அவர்களை வல்லவர்கள் நிருபர் கணபதியும் இதற்கு விதிவிலக்கல்ல. சொல்லப்போனால் இது விஷயத்தில் அவர் மிகச் சாமர்த்தியசாலி என்றே கூறவேண்டும். காந்திஜி வந்து இறங்கும் இடத்தை ரகசியமாக வைக்கப்பட்டிருந்த விஷயத்தை அவர் தெரிந்துவைத்திருந்தார். அவர் தமது காரிலேயே காமராஜை அம்பத்தூருக்கு அழைத்துச் சென்றார். அம்பத்தூரில்தான் காந்திஜி வந்து இறங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காந்திஜி வந்த விசேஷ ரயில் அம்பத்தூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்வதற்கு முன்னதாகவே காமராஜ் அங்கு மாலையுடன் போய்விட்டார். அங்கு ராஜாஜியும் அவருடன் சென்ற மற்றவர்களும் இருந்தார்கள். அவர்களைப் பார்த்து காமராஜ் புன்முறுவல் செய்தார். ராஜாஜி முகத்தில் ஈ ஆடவில்லை.

சிறிது நேரத்திற்கெல்லாம் காந்திஜி வந்து விசேஷ ரயில் அம்பத்தூரில் வந்து நின்றது. ரயிலை விட்டுக் காந்திஜி கீழே இறங்கினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என்ற வகையில் காமராஜ் முதல் மாலையைக் காந்திஜிக்கு அணிவித்து வணக்கம் செலுத்தினார். காந்திஜியும் சிரித்துக் கொண்டே காமராஜ் தோளில் தட்டி மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

## 15. 1946 தேர்தல்

காந்திஜி சென்னையில் ஒரு வாரம் தங்கியிருந்தார். அப்போது அவர் பல பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தினார். இலட்சோப இலட்சமாய் மக்கள் தினமும் பிரார்த்தனைக் கூட்டத்துக்குத் திரண்டு போவார்கள்.

(தொடரும்)

# பிறப்பு இறப்பு மற்றும் விவாகப்பதிவாளர் பதவி: சட்டத் திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிகளை வகிப்பதை தடைசெய்யும் வகையில் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவருவது குறித்து பதிவாளர் நாயகம் திணைக்களம் கவனம் செலுத்தி வருகின்றது.

அரசியல் வாதிகள் பதிவாளர்களாக பதவி வகிக்கும் போது பதவிக்கான பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதில்லை என்று பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக திணைக் களத்திற்கு பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

இதன்படி பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் சட்டம் மற்றும் பொது விவகாரம் பதிவு செய்யும் சட்டம், மலையக விவாகம் பதிவு செய்யும் சட்டம் மற்றும் விவாகரத்துச் சட்டம், முஸ்லிம் விவாகம் மற்றும் விவாக[illegible]துச் சட்டம் ஆகியவற்றில் திருத்[illegible] கொண்டு வரப்படவுள்ளது.

இந்தச் சட்டமூலம் பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அமைச்சரவை அங்கீகாரமும் இதற்குகிடைத்துள்ளதாக பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் பதிவாளர்களாக கடமையாற்றும் அரசியல் வாதிகள் அந்தப்பதவிகளை இழக்க நேரிடும் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# கிராமசேவை உத்தியோகத்தர் வெற்றிடங்கள்; விரைவில் நிரப்ப அரசாங்கம் நடவடிக்கை!

(கொழும்பு)

அரசாங்கம், இரண்டாயிரம் கிராம சேவை உத்தியோகத்தர்களை சேவையில் துரிதமாக சேர்த்துக்கொள்வதற்கு முடிவு செய்துள்ளது. இதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பெற்றுள்ளார்.

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதி லும் 1997 கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இவ் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு ஏற்றவகையில் திறந்த போட்டிப் பரீட்சையை நடத்துமாறு அமைச்சர் அமுனுகம சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில் கிரா[illegible] சேவை உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை இலங்கை பரீட்சைத் திணைக்களம் விரைவில் நடத் தவிருக்கிறது. இப்பரீட்சையின் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களம் வழங்கியதும் பெறுபேறுக[illegible]க்கமைய கிராம சேவை உத்தியோகத்தர்கள் நேர்முகப்பரீட்சையின் மூலம் சேவையில் சேர்த்துக்கொள் ளப்படு ார்கள் என அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது வடக்கு-கிழக்கு உட்பட நாடுமுழுவதிலும் 14 ஆயிரம் கிராம சேவை உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

ஈழத்தமிழ் அகதிகளின் நலன் கருதி

# 33 கோரிக்கைகளை தமிழக முதல்வரிடம் முன்வைத்தது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

தமிழகத்திற்கு வரும் இலங்கை அகதிகளுக்கு மாத உதவித் தொகையாக ரூ.839 அளிக்க வேண்டும் என் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் து.ரவிக்குமார் இலங்கை அகதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை செய்து தரவேண்டும் என்று வலியுறுத்தியும் அகதி முகாம்களின் நிலை குறித்து அவர்களின் நல்வாழ்வுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் 33 கோரிக்கைகள் அடங்கிய மனுவை முதல் வரிடம் கையளித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் உள்ள அகதிகள் முகாமின் நிலை மிக மோசமாக உள்ளது என அவர் சட்டப்பேரவையிலும் சுட்டிக்காட்டினார். ரவிக்குமாரின் கூற்றுக்கிணங்க அகதி முகாம்களின் நிலைகுறித்து அறிந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர்கள் சு.ப. தங்கவேலன், பெரிய கருப்பன் ஆகியோரடங்கிய குழுவை முதல்வர் நியமித்தார்.

இக்குழுவினர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் உடனடி நிவாரண நடவடிக்கைகளுக்கு முதல்வர் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது. ரவிக்குமார் அளித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 839 தேவை என வரையறுக்கப்பட்டுள்ளதுடன் தமிழகம் வரும் இலங்கை அகதிகளுக்கு குறைந்த பட்சம் இத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் அரிசி மட்டுமன்றி பால், பருப்பு ஆகியவற்றுடன் குடும்பத்தினரின் எண்ணிக்கைக்கு ஏற்ப சக்கரை என்பன மானிய விலையில் தரவேண்டும். அகதி முகாம்களில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு விரைவில் மோட்டார் சைக்கிள்கள்

(கொழும்பு)

கடன் அடிப்படையில் சமுர்த்தி அபிவி ருத்தி அதிகாரிகளுக்கும், முகாமையாளர்களுக்கும் மோட்டார் சைக்கிள்களை வழங்க சமுர்த்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கடன்கள் இலங்கை வங்கியின் மூலமாகவும் மக்கள் வங்கியின் மூலமாகவும் வழங்கப்படவுள்ளன. இந்தக் கடனின் மொத்தத் தொகை 85ஆயிரம் ரூபாவாகும் இந்தத் தொகை 60 மாதங்களில் கழிக்கப்படும்.

சமுர்த்தி அதிகார சபையின் நிதிப்பிரிவு கடன் பெற்றவர் சார்பில் இந்தக் கடனுக்கான 60 வீத வட்டியை கொடுக்கவுள்ளது. ஏனைய தொகையை கடன்பெற்றவர் செலுத்த வேண்டும். (க-9)

கட்டுப்பாடான சரியான வழியில் தம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும். இல்லை. என்றால் நேர்மாறான விளைவுகள்தான் உண்டாகும். -பிளேட்டோ

வலம்புரி

## படைத் தளபதிகளின் தொடர் கண்காணிப்புத் தேவை

யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து இச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

குறிப்பாக படையினர் மக்களின் குடிமனைகளுக்குள் நின்று காவல் புரிவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் முன்நிறுத்தப்பட்டிருந்தன.

இதேவேளை படையினர் மக்களின் குடிமனைகளில் நின்று காவல் புரிவது, மதில்களில் ஏறிப் பாய்ந்து வீடுகளுக்குள் செல்வது போன்ற விடயங்களை வலம்புரியும் நேற்று முன்தினம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருந்தது.

இதுபற்றி மனிதஉரிமைகள் ஆணைக்குழுவும் யாழ்.மாவட்ட படைத் தளபதியிடம் சுட்டிக் காட்டியமை பொருத்தப்பாடான செயலாகவே கொள்ளப்படும்.

மேற்படி விடயம் தொடர்பில் படையினர் குடியிருப்புக்களின் எல்லைகளுக்குள் நின்று காவல் புரிவது தடுக்கப்படும் எனவும் மதில் பாய்ந்து குறுக்குப்பாதையால் செல்வது நிறுத்தப்படும் எனவும் தளபதி கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

எனினும் அதன் அமுலாக்கத் தொடர் நிலையிலேயே, படைத் தளபதியின் உறுதிமொழி பாராட்டக் கூடியதாகவிருக்கும்.

அதேவேளை ஒவ்வொரு காவல் அரங்குகளிலும் கடமை புரியும் படையினரை மேற்பார்வை செய்வதும் படைத் தளபதிகளின் மிகப் பெரும் பொறுப்பாகும்.

யுத்த சூழ்நிலை யாழ்ப்பாணத்தில்ஏற்பட்டதிலிருந்து படைச் சிப்பாய்கள் தமது படைத் தலைமையின் கட்டுப்பாட்டை மீறியவர்களாகக் காணப்படுகின்றனர்.

எதுவும் எந்நேரமும் எப்படியும் செய்யலாம். தம்மை யாராலும் தட்டிக் கேட்க முடியாது என்ற நினைப்பு அவர்களிடம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலைமை மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். கடந்த கால சம்பவங்களை எடுத்து ஆராய்ந்தால் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

படைத் தலைமைகளின் கட்டுப்பாடுகள் தளர்ந்த நிலையில் அல்லது படைச் சிப்பாய்கள் எதைச் செய்தாலும் அதை நியாயப்படுத்தி-அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தாமல் விட்டமை படைகளின் கொடூரச் செயல்களுக்கு ஏதுவாயிற்று.

எனவே, படைச் சிப்பாய்களின் சுயமான செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதில் படைத் தலைமைகள் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அளித்த வாக்குறுதிகளை யாழ்.மாவட்ட படைத் தளபதி காப்பாற்றிக் கொள்ள முடியும்.

அத்துடன் பெண்களை சோதனை செய்யும் நடவடிக்கையில் பெண் இராணுவமே ஈடுபட வேண்டும். இதைவிடுத்து சில இடங்களில் படைச் சிப்பாய்கள் பெண்களை சோதிக்க முற்படுகின்றனர். இது தடுக்கப்பட வேண்டும். இதைச் செய்வதில் படைத் தளபதிகள் முன்நிற்பார்களா?

## புலிகளுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சிங்களப் பெண் தொடர்ந்தும் தடுத்து வைப்பு

(கொழும்பு)

வெலிக்கடை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நாவல பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வைத்து கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதாகக் கூறப்படும் சிங்களப் பெண் விசாரணைகளின் போது ஒன்றிற்கு ஒன்று முரண்பட்ட தகவல்களை வழங்குவதால் அவரை தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை நடத்துவதாக உயர்பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது பற்றியும் சந்தேகம் உள்ளதாக அந்த அதிகாரி கூறினார். அந்த சிங்களப் பெண் தமிழர் ஒருவரையே மணம் முடித்துள்ளார். அந்தத் தமிழரும் சிங்களப் பெண்ணின் பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளும் தற்போது அமெரிக்காவிலேயே வாழ்கின்றனர். அந்த சிங்களப் பெண்ணும் அமெரிக்காவில் இருந்து அண்மையிலேயே நாடு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பெண்ணின் பெற்றோரின் வீட்டில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுமார் 10 அறைகளைக் கொண்ட இந்த வீடு இரண்டு மாடிகளைக் கொண்டுள்ளது. அந்தப் பெண் அங்கு தனிமையிலேயே வாழ்ந்து வந்துள்ளார். அவர் சில மாதங்களுக்கு முன்னர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

வெலிக்கடை பொலிஸார் மேற்கொண்ட சோதனைகளின் போது அவரின் வீட்டிலிருந்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்ற விமான டிக்கெட்டுக்களும் விடுதலைப் புலிகளின் இலச்சினை அடங்கிய சில ஆவணங்களும் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு எழுதிய கடிதமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் அவரின் டயரியையும் சோதனையிட்டுள்ளனர். அதில் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகவே எழுதப்பட்டிருந்ததாகவும் விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென அவர் பல இடங்களில் எழுதியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில பாதுகாப்புப் படையினரால் யாழ்ப்பாணத்தில் தான் பாலியல் வல்லுறவிற்கு இலக்கானதால் தனக்கு விடுதலைப் புலிகளைப் பிடிக்கும் என்று பொலிஸ் விசாரணைகளின் போது அந்தப் பெண் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்குச் செய்யும் உதவியாக தற்கொலைப் படை உறுப்பினர் ஒருவரின் பிள்ளையொன்றை வளர்க்க விரும்புவதாகவும் அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு சில தடவைகள் சென்றுள்ளதாகவும் அதன்போது விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் சிலரை சந்தித்துள்ளதாகவும் விசாரணைகளின் போது அந்தப் பெண் கூறியுள்ளார். விடுதலைப் புலிகள் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கையில் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமும் அவரிடம் இருந்துள்ளது.

தான் மணமுடித்துள்ளவரிடமிருந்து தற்போது பிரிந்துள்ளதாகவும் பிள்ளைகள் இல்லை என்றும் ஒரு தடவை தெரிவித்துள்ளார். தனக்குப் பிள்ளைகள் இல்லை என்றும் ஆனால் கணவருடன் ஒற்றுமையாக வாழ்வதாக மற்றொரு தடவை கூறியுள்ளார். அவரின் இந்தப் போக்கு சிக்கல் மிக்கது என்றும் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெறப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவிற்கு அமைய அவரைத் தடுத்துவைத்து விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினரும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவும் இரகசியப் பொலிஸாரும் அடிக்கடி வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு சென்று அந்தப் பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க)

## தலைவரை முழுமையாக அறிந்துகொள்ள முடியாது சர்வதேசம் திணறுகிறது என்கிறார் கேணல் பால்ராஜ்

(கிளிநொச்சி)



தமிழீழத் தேசியத் தலைவரைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள முடியாத நிலையில் சர்வதேசம் திணறிக்கொண்டிருக்கிறது என்று விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மல்லாவியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையின் ஆறாவது அணிக்கான பயிற்சி ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தலைவரை விலைக்கு வாங்கவும் முடியாது, சதிவலைக்குள் வீழ்த்தவும் முடியாது. தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு தீர்வுத் திட்டத்திற்குள் அவரைக் கொண்டு வரவும் முடியாது என்பதனை சர்வதேச சமூகம் நன்றாக புரிந்து கொண்டுள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவரை பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியாத நிலையில் சர்வதேசம் திணறிக்கொண்டிருக்கின்றது.

உண்மையான ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடுகின்ற அமைப்பு தான் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு என்பதனை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டுள்ளது.தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையி லான அரசு ஒரு கொலைகார அரசு என்பது கண்டறியப்பட் டுள்ளது.

1983ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவங்களைப் போன்று மீண்டும் 2006 ஆம் ஆண்டு படுகொலைச் செயற்பாடுகள் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளன.

தற்போது இடம்பெறுகின்ற கொடூரமான கொலைகளுக்கு தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்பேற்க வேண்டும்.

தர்சினி படுகொலை, அல்லைப்பிட்டி படுகொலை ஆகியன முதல் கொண்டு மன்னார் படுகொலை வரையான கொலைகள் வரை மிகக் கொடூரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்குப் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து ஒரு புதிய செய்தியை இனியும் எதிர்பார்க்க முடியுமா?

முழுமையாக தமிழர்களை அழிப்பதற்காகவும் அதற்கான சதித் திட்டத்துடனும் இலங்கை அரசின் செயற்பாடுகள் இடம்பெறுகின்றதே தவிர தீர்வுத் திட்டத்தினை முன்வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்பதில் அரச தரப்பினர் எவருக்கும் அக்கறை இல்லை.

இவ்வளவு காலப் போரின் போது இலங்கை அரசிற்கும் அரசபடைகளுக்கு தக்க பாடம் புகட்டப்பட்டுள்ளது. போர் மூலம் வெற்றி பெறலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கனவு காண்கின்றார். நிச்சயமாக இது பகற்கனவாகவே அமையும் என்றார். (க)

## கிளைமோர்த் தாக்குதலினால் பாதிப்படையாத வாகனங்கள்

### விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்படுகிறதாம்

வடக்கில் விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு பெருமளவில் இரும்புத் தகடுகளும் வெல்டிங் குச்சிகளும் கொண்டு செல்லப்படுவதனால் விடுதலைப் புலிகள் கிளைமோர்த் தாக்குதலினால் பாதிப்படையாத வாகனங்களைத் தயாரிக்கின்றனரா என்ற சந்தேகம் இராணுவத்தினருக்கு எழுந்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஓமந்தை சோதனைச் சாவடியூடாக இந்த இரும்புத் தகடுகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் வன்னிப் பிரதேசத்திற்கு இரும்புத் தகடுகள் கொண்டு செல்வதற்கு அனுமதியளிக்கப்படாததுடன் அவற்றைக் கொண்டு சென்ற லொறிகளும் கொள்கலன்களும் திருப்பியனுப்பப்பட்டன.

அவ்வாறு திருப்பியனுப்பப்பட்ட இரு கொள்கலன்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கடந்த வியாழக்கிழமை ஓமந்தை சோதனைச் சாவடியினூடாக வன்னிக்கு சென்றுள்ளன.

அனுமதி பெறப்பட்டுள்ள இந்தத் தகடுகளை சேர்த்து ஒட்ட வைப்பதன் மூலம் எந்த அளவினைக் கொண்ட கிளைமோர் குண்டிற்கும் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையிலான தகரங்களை தயாரிக்க முடியும் என பொறியியல்துறை இராணுவத்தினர் தெரிவித்துள்ளதாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

## ஜனாதிபதி சட்டத்தரணியாக சாந்த அபிமன்னசிங்கம்!

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஒன்பது பேர் கடந்த வெள்ளிக்கிழமை பிரதம நீதியரசர் முன்னிலையில் உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.


மார்சல் பெரேரா , வின்சன்ட் பீரிஸ், ராசீக சரூக், கேமந்த வர்ணகுலசூரிய, டென்சில் ஜே.குணரட்ன, சாந்தா அபிமன்னசிங்கம், பாலித் மெண்டிஸ் குமாரசிங்க, மனோகரா ஆர்.டி. சில்வா, டாக்டர் கர்சா கப்ரல் ஆகியோரே சத்தியப் பிர மாணம் செய்துகொண்டவர்கள் ஆவர்.

யாழ்ப்பாண நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் வரலாற்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்நத் சாந்தா அபிமன்னசிங்கம் முதலாவது ஜனாதிபதி சட்டத்தரணியாக பதவியேற்றுள்ளது சிறப்பம்சமாகும்.

இலங்கையின் சட்ட வரலாற்றில் ஜனாதிபதி சட்டத்தரணியாக தெரிவு செய்யப்பட்ட மூன்றாவது பெண்மணி இவர் ஆவார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த மே மாதம் 26 ஆம் திகதி இந் நியமனங்களை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



பகலுக்குப் பிறகு இரவும், இரவுக்குப் பிறகு பகலும் வருவது போல், பிறப்புக்குப் பிறகு இறப்பும், இறப்புக்குப் பிறகு பிறப்பும் மாறி மாறி வருகிறது. இதிலிருந்து இறைவனின் மகா கருணையால் விடுபட்டு இறைவனுடன் ஒன்றுபடுவதுதான் முக்தி.

சுவாமி விவேகானந்தர்





நயினை நாகபூசணி அம்மனின் சப்பறத் திருவீதி உலாக் காட்சியும் பல்வேறு சோதனைகளுக்கு மத்தியில் பக்தர்கள் அம்பாளைத் தரிசிக்கச் செல்வதையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- திலீப்.

# ஆயுதம் தாங்கிய குழுவால் 45 பவுண் நகை கொள்ளை

## மானிப்பாய் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் புகுந்த இனந்தெரியாத ஆயுதம் தரித்த குழுவினர் 45 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் 45 பவுண் நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

யாழ்.நகரை அண்மித்த மானிப்பாய் வீதியிலுள்ள சரவணமுத்து குலேந்திரன் என்பவரது வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று கொச்சைச் சிங்கள மொழியிலும் தமிழிலும் பேசியவாறு வீட்டினுள் நுழைந்த ஆயுததாரிகள் வீட்டில் இருந்தவர்களை ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு அவர்களின் தலைகளில் துப்பாக்கிகளை வைத்தவாறு நகைகள் இருக்கும் இடத்தைக் காண்பிக்குமாறு கேட்டுள்ளனர்.

அத்துடன் சில ஆயுததாரிகள் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துள்ளனர். இதனால் அச்சமடைந்த குலேந்திரன் நகைகள் இருந்த இடத்தைக் காண்பிக்கவே அவர்கள் அவற்றை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அந்த ஆயுததாரிகள் முகங்களை மறைத்து கறுப்புத் துணியால் கட்டியிருந்ததாகப் குலேந்திரன் தெரிவித்தார். இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

# மட்டக்களப்பு நகரப் பகுதியில் சக்தி வாய்ந்த கண்ணி வெடி மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரப் பகுதியில் 40கிலோ எடையுள்ள கண்ணிவெடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

புத்தளம்-கற்பிட்டி வீதியில் ஒரு மரத்தில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோரை கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்த சில மணி நேரங்களில் இந்த சக்தி வாய்ந்த கண்ணி வெடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கல்வியங்காடு-மட்டக்களப்பு வீதியில் மட்டக்களப்பு நகருக்கு மத்திய பகுதிக்கு அரைக் கிலோ மீற்றர் குறைவான தொலைவில் இந்த கண்ணி வெடி இருந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இராணுவ வாகனத் தொடரணி கடந்து செல்வதற்கு முன்பாக அந்த வீதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினர் இதைக் கண்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரைச் சுற்றிய பகுதிகளில் கடந்த சில மாதங்களாக கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டு வரும் நிலையில் மட்டக்களப்பு நகரில் முதன்முறையாக கண்ணி வெடி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும் இது சி-4 வகையைச் சேர்ந்ததென்றும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார். (ச-5)

# ஒஸ்லோ இணக்கப்பாட்டிற்கேற்ப சமஷ்டித் தீர்வு காணப்பட வேண்டும்

## ராதிகா குமாரசாமி செவ்வி

ஒஸ்லோ இணக்கத்திற்கேற்பவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி தீர்வு காணப்பட வேண்டும் என் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர்களும் ஆயுதப் பிணக்கும் தொடர்பான பிரதிநிதி ராதிகா குமாரசாமி தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்கு எதிரான சக்திகளாக இலங்கையின் அரசியல் முரண்பாடுகளே காரணமாகும்.

இந்நிலையில் இலங்கையின் இறைமைக்குட்பட்டவாறு வெளிநாடுகளின் சமாதான ஏற்பாடுகள் அமைய வேண்டும் என அவர் கருத்துரைத்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேசத்தின் தலையீடு சாதகமானதே. எனினும் அதிகரித்துவரும் தீவிரவாதக் கருத்துக்கள் பாதுகாப்பின்மையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்புக்கள் குறித்து கருத்துரைத்துள்ள அவர் சிறுவர்களுக்கெதிரான 6 குற்றங்களை முடிபுக்குக் கொண்டு வருவதையே தமது பதவி நோக்காக கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களைப் படைகளுக்குச் சேர்த்தல், கொலைகள், கடத்தல்கள், பாலியல் வன்புறுத்தல்கள், பாடசாலை மற்றும் வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்கள் என்பனவே அவை எனவும் வரையறுத்துள்ளார். (ச-5)

# வடமராட்சியில் நேற்று பாரிய சுற்றிவளைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி, புலோலி, மாலனை, அறுபது பாகை கிணத்தடி போன்ற பகுதிகள் நேற்றுக் காலை 10.30 மணிமுதல் பிற்பகல் 2மணி வரை இராணுவத்தினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத் தேடுதலின்போது அப்பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களின் அடையாள அட்டைகளை வாங்கிய இராணுவத்தினர் அவர்களை பருத்தித்துறை வீதி முதலாம் கட்டை சந்தியில் அமைந்துள்ள புகைப்படம் எடுக்கும் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு சென்ற இளைஞர்கள் அனைவரையும் முதலாம் கட்டைச் சந்தியில் வைத்து தலையாட்டி முன் நிறுத்தி விசாரணை செய்த இராணுவத்தினர் அவர்களின் சுயவிபரங்களையும் பதிவு செய்து பின்னர் அடையாள அட்டைகளை வழங்கி வீடு செல்ல அனுமதித்தனர். (ச-5,55)

# நிபுணர்கள் குழுவில் இரு தமிழர்கள்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அதிகாரப் பரவலாக்கல் குறித்த அரசாங்கத்தின் பிரேரணை குறித்து 15 பேர் கொண்ட குழுவொன்று நாளை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்படவுள்ள இந்தக் குழுவில் மேலதிகமாக இரு தமிழர்களும் ஒரு முஸ்லிமும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் புதிய பிரேரணையை தமது கட்சி எதிர்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார். (ச-9)

## கொலை...

தெரியவந்துள்ளது. கைது செய் யப்பட்ட மூன்று இராணுவச்சிப்பாய்களும் நேற்றிரவு யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக இன்று பூரண விசாரணைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. (ச-5)

## நாட்டின் சமாதான...

பிரதியமைச்சராக்கி விட்டதால் இந்தியாவின் விருப்பப்படி மகிந்தவுடன் தங் களால் இணைந்து செயற்பட முடியாது என்று இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய அரசாங்கத்திடம் நேரடியாக முறையிடுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவை ரணில் விக்கிரமசிங்க அவசர அவசரமாக அனுப்பிவைத்துள்ளார். மறுநாள் வெள்ளிக்கிழமை கொழும்பில் இந்தியத்தூதுவர் நிருமராவை ரணில் விக்கிரமசிங்க சந்தித்து இது குறித்து தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு நிருபமராவ் கூறிவிட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# யாழ்.மேலதிக நீதிபதி சிறிநிதிக்கு...

புலமைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனது மகனை தனது உத்தியோகபூர்வ வாகனத்தில் வாகனச் சாரதி, பொலிஸ் உத்தியோகஸ்தர் சகிதம் நேற்றுக் காலை திருநெல்வேலியில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தார்.

அவ் வாகனம் நீதிபதியின் மகனை இறக்கி விட்டு மீண்டும் ஏற்றுவதற்கு அங்கு சென்றது. பரமேஸ்வராச் சந்தியை வாகனம் அண்மித்தவேளை அப்பகுதியில் வேகமாக வந்த வாகனம் ஒன்றின் சாரதி திடீரென நீதிபதியின் காரை வழிமறித்து 'உங்களின் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்காக இராணுவம் வருகின்றது' என்று தெரிவித்துள்ளார்.

இத்தகவலைக் கேட்ட சாரதி, உடனடியாக காரை நிறுத்தி விட்டு, பொலிஸ் உத்தியோகஸ்தருடன் வெளியே பாய்ந்துள்ளார். அவ்வேளை கார் நிறுத்தப்பட்ட இடத்திற்கு ஆட்டோவில் வந்த இராணுவத்தினர் நீதிபதியின் காரை இலக்கு வைத்தவாறு சாரதியைச் சுடுவதற்கு முயற்சித்துள்ளனர்.

### தப்பிய கார்ச் சாரதி

அவ்வேளை இராணுவத்தை தடுத்து நிறுத்திய சாரதி, 'நான் ஓட்டி வந்தது மேடத்தினுடையது. எதற்காக என்னைச் சுட முயற்சிக்கின்றீர்கள்' எனக் கேட்டுள்ளார்.

அப்போது பதிலளித்த இராணுவச் சிப்பாய் 'சந்தேகம் ஏற்பட்டால் யாரையும் சுடுவதற்கு இராணுவத்திற்கு உரிமையுண்டு' எனத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சாரதி 'அப்படியாயின் என்னை நீ சுடு' எனக் கூறியுள்ளார். அதேவேளை சம்பவத்தை அவதானித்த அப்பகுதி மக்கள் அவ்விடத்தில் ஒன்று கூடி இது சிறிநிதி அம்மாவுடைய கார் சுடாதீர்கள் எனக் கோசம் எழுப்பி இராணுவத்தின் இலக்கை முறியடித்தனர்.

### பொலிஸாருடன் வாக்குவாதம்

இது இவ்வாறிருக்க மற்றொரு இராணுவச் சிப்பாய் பொலிஸாரைச் சுட முயற்சித்துள்ளார்.

அப்போது அம் முயற்சியைத் தடுத்த அவர் 'நான் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர். நீங்கள் வழிமறித்துள்ளது நீதிபதி அம்மாவினுடைய கார். நான் பொலிஸ் என்பதற்கு அடையாளம் என்பதற்காக சீருடை அணிந்துள்ளேன்.

அத்துடன் கைத்துப்பாக்கி வைத்துள்ளேன். எதற்காக எங்களை சுட முயற்சிக்கின்றீர்கள்' எனக் கேட்டுள்ளார்.

அதற்கு செவி சாய்க்காத சிப்பாய், 'நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை. எனக்கு சந்தேகம் என்றால் நான் சுடுவேன்' என மிரட்டியுள்ளார்.

இந்நிலை தொடர்ந்தபோது அப்பகுதியில் பெருமளவு திரண்ட மக்கள் இராணுவத்திற்கு எதிரான முயற்சியில் ஈடுபட அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக நீதிபதி சிறிநிதி நந்தசேகரனுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டு அவர் சம்பவ இடத்திற்குச் சென்றார். அப்போது அம் மூன்று சிப்பாய்களும் சம்பவ இடத்திலேயே நின்றிருந்தனர்.

அவர்களிடம் நீதிபதி விசாரித்தபோது அவர்கள் மீண்டும் 'சந்தேகம் இருந்தால் யாரையும் சுடுவோம்' என அவரிடம் தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பதிலளித்த நீதிபதி, அவ்வாறான சட்டம் எதுவும் இல்லை எனத் தெரிவித்ததுடன் யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறையிட்டுள்ளார்.

இதுதொடர்பாக உரிய தரப்பினரிடம் உடனடியாகத் தெரிவித்ததாக நீதிபதி தெரிவித்தார். இதேவேளை கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் நீதிபதியின் வாகனம் றக்கா வீதியிலுள்ள இராணுவத்தினரால் சல்லடை போட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.